சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

Telephone: No. 300.

“கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்”

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 32-ம் இலக்கம்

## இல்லறமும் இறைவன் அருளும்

“கலியாணமென்றால் காட்டுப் பூனைக்கும் சந்தோஷமாம்” என்று சொல்வார்கள். ஆனால், கலியாணமென்னும் விவாகபந்தனம் எத்துணை காத்திரமான பொறுப்புடையது என்பதைப் பெற்றோரும், வாலிபர்களும், பெண்மணிகளும் நன்கு உணரவேண்டும். இல்லறம்என்னும்நல்லறம்சிறக்க இறைவன் அருள்வேண்டும். ஈருடலும், ஓர்உயிரும்போன்று புதுமணத்தம்பதிகள் இணைபிரியாது சகோதரத்துவம்பூண்டு அன்புடன் இன்புற்றுவாழ வகைதேட வேண்டும்.

ஆனால், “எல்லாரும் பொன் பூண என்மகளோ பார்த்திருப்பாள்” என்பதற்கிணங்கச் சிலர் தங்கள்பெண்மணிகளுக்கு மணம் முடித்து வைத்தாலே போதும் என்று கண்மூடித்தனமாக நடந்துகொள்ளுகிறார்கள். சுருங்கச் சொல்லின் கைக்கெட்டிய வாலிபனைக் கரும்பாகநினைத்துக் கணப்பொழுதில் பெண்ணுக்குக் கலியாணஞ்செய்து விடுகிறார்கள். அதனால், மணமகனின் குணகுணங்களையோ, அவரின் யோக்கியாம்சங்களையோ, தராதரத்தையோ, பொறுப்பையோ அறிந்து கொள்ளமுடியாத பாலகிபோன்ற பெண்மக்கள் தம் இல்லறசீவியத்திலே தத்தளித்துக் குடிமூழ்குவதை நாம் கண்ணாரக்கண்டு வருகின்றோம்.

கடந்த மகாயுத்தத்தின்போது கடல் அலைபுரள்வதுபோல மக்களின்சீவியம் அலைமோதி அல்லலுற்றுக் கொண்டிருந்த சமையம் பால்மணம்மாறாத பெண்மணிகளை — தமதுபெண்மக்களை நீர்க்குமிழிபோன்ற கிபந்தனைகளுக்குட்பட்டுச் சில இராணுவவீரர்களின் “அலவன்ஸ்”என்னும் உபகாரச்சம்பளம்பெறும் நோக்கமாய் அவர்களுக்கு மணம்முடித்துக்கொடுத்து, பின்னர் அப்பெண்மக்களின் சீவியத்தை நாசமாக்கியபொறுப்புள்ள பெற்றோரும் எம்நாட்டில் இன்றுநிம்மதியாய் வாழுகிறார்களென்றால் அவர்களின் பொறுப்பற்ற செயலை யார்தான் கண்டியாதிருக்க முடியும்? ஆங்காங்கு நகரங்களிலே கலியாணவிஷயமாகப் பெற்றோர் கீழ்நாட்டு நாகரீக முறைகளைமறந்து மணமுடியாத வாலிபர்களை இளம்பெண்கள் வசிக்கும் தமதுஇல்லங்களிலே வரவேற்கிறார்கள். அம்மட்டா! அவ்வாலிபர்கள் தங்கள்மக்களைப் படமாளிகைகளுக்கு அழைத்துச் செல்லவும் அனுமதிக்கிறார்கள்.

இதனால், அநேக கெடுதிகள் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. இதைஉணர்ந்தே பெரியார்சிலர் படமாளிகைகளுக்குச் சீவியத்தைச் சீர்குலைக்கும் சினிமாஎன்றும், பாவத்தின் பாடசாலை படக்காட்சிச் சாலையென்றும் பெயரிட்டிருக்கிறார்கள். இத்தகையமுறைகேடுகளுக்குப் பெற்றோர் இடங்கொடுப்பதால் சில வாலிபர்கள், பெண்மணிகளின் எதிர்காலம் நாசமடைகின்றது. இச்சீர்கேடுகளைக் காணும்தோறும் அறிவாளிகள் எமதுநாட்டுப்புறங்களிலே இளம்பெண்மணிகள் அடக்கஒடுக்கமாக வளர்க்கப்படும்முறையை வாயாரப் புகழ்ந்து வரவேற்கிறார்கள்.

பெற்றோர் தங்கள்வயதுவந்த பெண்மணிகளுக்கு விவாகபந்தன ஏற்பாடுசெய்யும் விஷயத்திலே மணமகன் குடும்பப்பொறுப்பை உணர்ந்து நடக்கக் கூடியவரா என்பதையும், சீவியத்தை விமரிசையாய்நடாத்துவதற்கான சிறந்தயோக்கியதை உடையவரா என்பதையும் அறிந்துகொள்வதுடன், அவரது குணவிசேஷங்களையும் சற்றேஅலசிப் பார்த்துக்கொள்வது அத்தியாவசியகம். இவைபோன்ற முக்கிய பொறுப்புகளைக் கவனியாது, மணமகனுக்குச் சம்பளத்தைவிட, “வெட்டுக்கொத்துகள்”, வேறேதும்வரும்படிகள் உண்டாவெனவிசாரிப்பது சர்வசாதாரணமாகி விட்டது.

இருகுடும்பங்களுக் கிடையிலே கலியாணப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் பொழுது, நாட்டைக்குழப்பும் ‘தமனகன்’, ‘கரடகன்’கள் அவற்றைக் குழப்பிவிடப்பிரயத்தனம்செய்வது சர்வசாதாரணமே. இவ்விதம் கேடுசெய்யமுற்படும் விஷமிகள் தங்கள்மீது குமர்ப்பழியைத் தேடிக்கொள்ளுகிறார்கள். கேடுசெய்யமுற்படும்இவர்கள் பிள்ளைகளைப் பெற்றவர்களாயிருப்பின் ஒருகால் தங்கள்மக்களைக் கரையேற்றுவதிலும் கட்டாயம்சங்கடப்படவேண்டிவரும். பராபரன் ஏற்படுத்தக்கூடிய விவாகபந்தனத்திலே மனிதர்கேடுசெய்ய முடியா

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## தெரேசா நியூமன் — திருக்காய வரம்பெற்ற மாது

(சென்றவாரத் தொடர்ச்சி)

தீயணைப்பதில் கடுமையாக உழைத்தமையால் தெரேசா முதுகுப்புறம் உளைந்து தனக்குண்டான கொடிய வேதனையைத் தாங்கலாற்றாது கதிரையிலிருந்தும் கீழேயிறங்கித் தீயைவிட்டு அப்புறப்பட்டதும் அபாயகரமான நோய்கண்டு வருந்தினாள். எசமானனின்வீட்டிலோ, அன்றேல் குதிரைலாயத்திலோ வழமைபோலத் தனதுபணிகளைச்செய்ய எவ்வளவோதூரம் முயன்றுபார்த்தாள். ஆனால், அவளுடைய கைகால்முதலாம் அவயவங்கள் இடங்கொடுக்கவில்லை. சரீரபாரம் தாங்கமாட்டாது நிலத்தில்விழுவாள். பின்னர் எழுந்துகொள்ளமுடியாது தவிப்பாள். கீழறைப்படிகள் அல்லது ஏணிப்படிகளிலிருந்து தலைகீழாகவிழுவாள். ஆறு தினங்களுக்கு ஒருமுறை அறிவுநினைவற்று மூர்ச்சித்துக்கிடப்பாள். என்றாலும்அவள் வேலை செய்வதைக் கைவிடவில்லை. ஆனால், அவளுக்குண்டான நோய் வரவர மிகமோசமாகிக் கொண்டுவந்தது. பயங்கரவலிப்புகள், பாதிப்பக்கம்மூடம், வாந்தி, இரணம், கட்டி, வீக்கம்ஆதியன உண்டானதைத்தொடர்ந்து ஈற்றில் அவளுடைய கண்கள் இரண்டும்கெட்டு முற்றாகக்குருடாயின. சுவாசம்வாங்குவதும் கஷ்டமாயிற்று. கடைசியாகத் தசைநார்கள் கடுமையாகச்சுருங்கிக் குறுகிக்கொண்டுவந்து, அதனால் அவளின் இடதுபாதம் வலதுதொடைக்குமேலாக இழுபட்டுத் தாங்கொணாஉபத்திரவத்தை உண்டுபண்ணலாயிற்று.

### தெரேசம்மாளும் தெரேசாநியூமனும்

1923-ம்ஆண்டு தொடர்பாக ஏற்படத்தொடங்கிய வழமைக்கு மாறான அபூர்வஆரோக்கியங்கள் மனவுணர்ச்சியைத் தட்டியெழுப்புவனவாய்க் காணப்பட்டு, நிச்சயமாகச் சம்பவிக்குமென நம்பியிருந்த மரணத்திலிருந்து தெரேசாநியூமனைக்காத்துவைத்தன. இந்தப்புதுமையான ஆரோக்கியங்கள் சடுதியில்ஏற்பட்டனவாகும். அவள் வெகுவாக அன்புபாராட்டிப் பக்திசெய்துவந்த குழந்தையேசுவின் அர்ச். தெரேசம்மாளுடன் இவைகள் நெருங்கியதொடர்புள்ளனவாய் இருந்தன. முதலாவது ஆரோக்கியம் 1923-ம்ஆண்டு சித்திரைமாதம்25-ந்திகதி உண்டாயிற்று. அதாவது சிறியபுஷ்பத்தின் திருப்பண்டம் ஒன்றை அவள்தொடச்செய்ததும் அவளை வருத்திக்கொண்டிருந்த குடற்புண் குணமாகிவிட்டது.

### திரும்பவும் பார்வை அடைந்தாள்

இதுநிகழ்ந்து நான்குதினங்களின்பின்னர் அவளுடையதந்தையான திரு. நியூமன் அவளுடையகண்களுக்கென்று ஓர் புதியமருந்து வாங்கப்போவதாக அவளிடம்தெரிவித்துவிட்டு அதிகாலையில் புறப்பட்டுச்சென்றார். பரிசோதனைக்கென்று டக்றர் சீய்டிள் தேவைப்பட்டமருந்து அதுவாகும். நான்குவருடங்களாக அவள்இருந்துவந்தது போல் கண்தெரியாத ஓர்குருடியாகவே அவர் அவளைவிட்டுச் சென்றார். அவர் புறப்பட்டுச் சென்று அரைமணிநேரந்தான் சென்றிருக்கும். “சடுதியாக எனதுகண்களைத் திறந்தேன்; எனதுகரங்களையும், இரவிலே நான்அணிந்துகொள்ளும் உடையையும், சுவர்களில்தொங்கிய படங்களையும் கண்டேன்; ஓர்கால் எனதுகண்களை நான்கசக்கினேன்; நான் கனவுகாண்கிறேனாஎன்று நானே என்னைக் கேட்டேன்; அப்போது ஓர் பெண் எனது அறைக்குள்ளே நுழைந்தாள்; அவள்யாரென்று நான் அறிந்துகொள்ளவில்லை; நீ யாரென்று கேட்டேன்; அப்போது அவளுடையகுரலை நான் மட்டிட்டுக்கொண்டேன்; அவள்தான் எனதுசகோதரி செசன்ஸில்; கடைசிமுறையாக நான் அவளைப்பார்த்ததிலிருந்து அவள்எவ்வளவோ அதிகம் வளர்ந்திருந்தாள்”என்று தெரேசாகூறினாள். சிறியபுஷ்பம் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பட்டதினம்அதுவாகும். அன்றுதானே — அதாவது 1923-ம் ஆண்டு சித்திரைமாதம் 29-ந்திகதியன்றே அவள் சின்னத்தெரேசம்மாளுக்கு ஓர்நவநாள் தொடக்கியிருந்தாள். இந்தஆரோக்கியம் விளக்கமுடியாததாய் இருந்தது. டக்றர் சீய்டிள் அவர்களும் விளக்கங்கொடுக்க முடியாதவராயிருந்தார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாலை கண்டுகளித்த பெருவிழா

அன்று 2-ந்தேதி சனிவாரம். ஆலய மணிகள் ஆர்ப்பரித்துக் கலைவிழாஆரம்பமாகப்போவதை மக்களுக்குத் தெரிவித்தன. மாலை மணி 4. ஆலயத்தில் செபமாலையோதிப் பாத்திமாஅன்னையின் ஆசியைஇரந்துகொண்டபின் பாத்திமாஆண்பாடசாலை மாணவர்கள் பாடசாலைவிருதுதாங்கி முன்செல்ல, மரியன்னை பெண்பாடசாலைமாணவிகள் பின்செல்ல, மன்னார்மாவட்டத்தின் பலபாகங்களிலுமிருந்து வந்துகுழுமிய அன்பர்களுடன்கூடிய பெருஞ்சனத்திரள் பின்தொடரப் பேசாலைக்கட்டளைக்குரவர் வண. எஸ். கருணுகரர் சுவாமியவர்கள் பாடசாலைமைதானத்திற்கு அழைத்துவரப்பட்டார். ஆங்கு பாத்திமாபாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. அ. சிங்கராயர்அவர்கள் குரவரை வரவேற்று விழாவை ஆரம்பித்துவைக்குமாறு கேட்டுக்கொண்டார். சுவாமியார் பாடசாலைக்கொடியைக் கரகோஷங்கள்மத்தியில் விண்ணிலுயர்த்த, மாணவர்கள் பாடசாலைக்கீதம இசைத்துநின்றார்கள்.

அதன்மேல் பேசாலைக் கிராமச்சங்க தலைவர் திரு. எலியாஸ்பீரிஸ், பேசாலைப்பிரமுகர்களான திரு. சூசைலம்பேட், திரு. தவிது பீரிஸ்என்போர் கண்காட்சிமண்டபங்களைத் திறந்துவைத்தனர். அவற்றின்வாயிலில ''கொங்கிறீற்''கொண்டு செய்யப்பட்ட தீபஸ்தம்பமஒன்றும், மணிக்கூண்டுக் கோபுரமொன்றும் தரிசகர்களை வரவேற்றுநின்றன. அவர்கள்உட்சென்றபோது பிரமிப்பையூட்டும் பல்வேறு காட்சிகள் இருளைப்பகலாக்கிய மின்சாரதீபங்களுடன்சேர்ந்து ஒளிவீசின.

மகாராணிஎலிசபெத் தமது நாயகர், குழந்தைகளுடன்கூடிய பெரிய தோர்வாணப்படம் குடியியல், சரித்திர மண்டபத்லதை அணிசெய்துநின்றது. பிரித்தானிய, அமெரிக்க, கனடிய, இந்திய, ஆஸ்திறேலிய, பிரான்சிய, டென்மார்க்கிய, ஜப்பானியகாரியாலயங்கள், உதவியசுவரொட்டிகள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகளுடன் இம் மண்டபம் ஓர்சர்வதேசஅரங்காகக் காட்சியளித்தது. இலங்கைஅரசாங்கம்பற்றிய பல்வேறுபடங்களுடனும், சஞ்சிகைகளுடனும் இலங்கைப்பாராளுமன்ற மாதிரிஉருவத்தைத் தாங்கிநின்ற இம்மண்டபத்தில் இலங்கைப் பொலிஸ்பகுதியின் வீதிப்பாதுபாப்பு இயக்கக் குறிப்புப்புத்தகங்களும், சேமிப்புப்பகுதியின் பிரசுரங்களும் இலவசமாக வழங்கப்பட்டன.

அழகியற்கலை மண்டபவாயிலை அணிசெய்துநின்றது, விண்ணிலே பறந்து செல்லும் விமானம்ஒன்று, மண்டபத்தினுள்ளே நவீனமோட்டார்வண்டி, மாதிரிப் புகையிரதநிலையம், நவீன வீடு, கப்பல்என்பன அணிவகுத்துநின்று கண்டவர்கண்ணையும், கருத்தையும் கவர்ந்துநின்றன. ஜப்பானிய சிறுவரின் சித்திரங்களை முதலாகக்கொண்டு மாணவரின் பல்வேறுசித்திரங்களை ஒருபுறமும், இசைத்தட்டுச் சித்திரங்கள், கண்ணுடிச்சித்திரங்கள், மாணவரின் கைப்பணிப்பொருட்களை மறுபுறமும்கொண்டு விளங்கியது அம் மணிமண்டபம்.

அனைவரையும்தென்னைமரமொன்று வரவேற்றது பூமிசாஸ்திரமண்டபத்திலே. இலங்கையில்தென்னைவளர்ச்சி, அதன்பிரயோசனங்கள், உலகவிமானப் பிரயாணமாதிரிஅமைப்பு, கண்டங்கள்ஒவ்வொன்றினதும் இயற்கைத் தாபரங்களின் அமைப்புகள்என்பன இதனைஅணிசெய்துநின்றன. மண்டபத்தின் மறுபுறத்தில் ஞாபைபதேசப் பாட உபகரணங்கள் காட்சியளித்தன. இவற்றின்பின்னல் அமைந்திருந்தது பாலர்களரியாகும். பாலர் வகுப்புகளில் மாணவர்விளையாட்டாகவே கற்கஉதவும் நவீன பாடஉபகரணங்கள் இங்குகாணப்பட்டன. ஆசிரியர்கள், சங். கன்னியர்கள்பலர் இங்கே தரித்துநின்று தங்கள்சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டார்கள்.

கடைசியாகக் காட்சியளித்தது சுகாதார விஞ்ஞானப்பகுதிமண்டபம். அரசாங்க சுகாதாரப்பகுதி அளித்த பல்வேறு காட்சிப்பொருட்களையும் தாங்கிநின்றது இம்மண்டபம். சுகாதாரபிரசுரங்கள்பல இங்குவழங்கப்பட்டன. இதயத்துடிப்பைக் காட்டும் உரித்தகோழி, குறைப்பிரசவக் குழந்தைகள்போன்ற பல்வேறு அம்சங்களுடன்காட்சியளித்த இம்மண்டபத்தின மறுபுறத்திலே விஞ்ஞான ஆராய்ச்சி உபகரணங்கள்பலவும், பரிசோதனைகளைவிளக்கும் சித்திரப்படங்களும், மின்சாரத்திலியங்கும் றெயில், பஸ்வண்டியும் காணப்பட்டன.

சனி, ஞாயிறு இருதினங்களிலும் திரள்திரளாகத்தரிசகர்கள் இவைகளையெல்லாம் பார்வையிட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். மாலை 5மணிக்கு மைதானத்தின்மத்தியில் அமைந்திருந்த உயர்மேடையில் பேச்சுப்போட்டியும், பாட்டுப்போட்டியும் நடைபெற்றன. தங்கள்குழந்தைகளின் திறமையைச் செவியாரப்பருகிஇன்புறப் பெற்றோரும், மற்றோரும் பெருந்திரளாகக் குழுமியிருந்தார்கள். இரவு 7மணி. பாடசாலைமண்டபம் மக்களால் தேங்கியிருக்க மன்னார், புனிதசவேரியார் கல்லூரி அதிபரின்ஆதரவில் சினிமாக் காட்சிகள் ஆரம்பமாயின. பிரித்தானியதூதுவர் காரியாலயம்உதவிய ''மகாராணியின் உலகயாத்திரை'' ஷெல்கம்பெனிஉதவிய ''மகாராணியின் இலங்கையாத்திரை,'' ''விமானப் பயணவளர்ச்சி'', ''எண்ணெய்க்கிணறுகளின் வரலாறு,'' ''இதுதான் எண்ணெய்,'' என்றபடங்கள் திரையிடப்பட்டு இரவு10-30மணிக்கு விழாவின் முதலாவதுதினம் முடிவாயிற்று.

3-ந்தேதி ஞாயிறுவாரம் பகல்முழுவதும் திரளானோர்கூடிக் காட்சியைக் கண்டுகளித்தனர். வவுனியா, மன்னார், பள்ளிமுனை ஆதியாமிடங்களிலுள்ள திருக்குடும்ப கன்னியர்கள் மற்றும்ஆசிரியைகள், மாணவிகளுடன் விஜயஞ்செய்து காட்சியைப் பார்த்துச்சென்றனர். மாலை3மணியளவில் பாடசாலைமைதானத்திலே மக்கள்திரளாகத் தேங்கிநிற்க மாணவரிடையே விளையாட்டுப்போட்டிகள் நடாத்தப்பட்டன

இரவு 8மணி. பாடசாலை மைதானத்தில் அமைந்திருந்த திறந்தவெளி அரங்கைச்சுற்றிச் சனத்திரள்அமர்ந்திருக்க, உயர்மேடைக்கு மன்னார்மாவட்ட மூப்புச்சுவாமியார் அதிவண. ஜி. ரி. பாலசுந்தரம்சுவாமியவர்கள் மற்றும்குருமார், பேசாலைஆலயநிர்வாகிகள் சகிதம் அழைத்துவரப்பெற்றார். பாடசாலைக்கீதம் படிக்கப்பட்டதும், தலைமையாசிரியர் பாடசாலைஅறிக்கையை வாசித்தார். பாடவகைகளிலும் சித்திரப்போட்டி, பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி, விளையாட்டுப்போட்டிகளிலும் திறமை காட்டியோர்க்கு அதிவண. பாலசுந்தரம்சுவாமியவர்கள் பரிசில்கள்வழங்கினர். சுத்தப்போட்டிக்காக யாழ்ப்பாணம், அப்துல்லா கம்பெனியார்உதவிய வெள்ளிக்கிண்ணம் சிவப்புஇல்லத்துக்கும், கலைவிழாப் போட்டிக்கிண்ணமாக யாழ்ப்பாணம், எல். கே. எஸ். தங்கமாளிகையினர் உதவிய வெள்ளிக்கிண்ணம் மஞ்சள்இல்லத்துக்கும் அளிக்கப்பட்டன.

அவ்வேளை சுவாமியவர்கள் நிகழ்த்தியஉரையிலே, [illegible] பாடசாலைகள் [illegible] எவ்விதத்திலும் குறைந்தவையல்ல என்பதற்கு இக்கலைவிழா போதிய எடுத்துக்காட்டாகுமெனக் கூறினர். பல்வேறுகலைகளையும் ஒன்றுசேர்த்துத் திறமையுடன் கலைவிழாவை உருவாக்கிய ஆசிரியர்குழாமைப் பாராட்டிப் பாடசாலைக்குப் போதியஆதரவு காட்டுமாறு பெற்றோரை வேண்டிக்கொண்டார். அதன்மேல், நவீனஅம்சங்களுடனும், ஒளி, ஒலி, அமைப்பு வசதிகளுடனும்கூடிய ''பலித்தகனவு'' என்ற நாடகத்தைப் பாடசாலைமாணவர்கள் அரங்கேற்றினர். ஈற்றில், ஆசிரியர் எஸ். ஏ. தாம்அவர்கள் பேசாலைவாசிகளின்சார்பில் விழாநிர்வாகிகட்குப் பாராட்டுரைகூறினர். பின்னர் நிர்வாககாரியதரிசியால் நன்றி தெரிவிக்கப்பட்டுப்பாப்பரசர்வாழ்த்துக் கீதத்துடன்விழா இனிதேமுடிவுற்றது.

**கண்டுகளித்தோன்.**

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**கத்தோலிக்க ஐக்கியசங்கம் :**

நமதுபங்கிலுள்ள கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் வருடாந்தபொதுக்கூட்டம் சென்ற 10-8-58ஞாயிறன்று பிற்பகல் ஆசீர்வாதத்தின்பின் நடந்தேறியது. சங்ககாரியதரிசியால் வருடாந்த அறிக்கை வாசிக்கப்பட்டது. தனாதிகாரியால் கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற புதுவருட உத்தியோகஸ்தர்தேர்தல் வருமாறு:

அக்கிராசனர்: திரு. எஸ். எம். தியோப்பிலஸ், டி. ஆர். ஓ. உபஅக்கிராசனர்: திரு. சவரிராசா ஆசிரியர். காரியதரிசி: திரு. எஸ். ஈ. அன்ரனி. தனாதிகாரி: திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை. நமதுபங்கில் இச்சங்கம்செய்த, செய்கின்ற, செய்யவேண்டிய தொண்டுகளைப்பற்றியும், இதன்வளர்ச்சிக்கானவைபற்றியும் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளால் சிறந்ததோர் சொற்பொழிவாற்றப்பட்டது. அதன்மேல் இவ்வருடம் திரிகோணமலைமேற்றிராசன ஐக்கியசங்க மகாநாடு தாண்டவன்வெளிப்பங்கில் நடைபெறவிருப்பதால் அதற்குவேண்டிய ஏற்பாடுகள்பற்றிச் சங்கத்தவர்கள் ஆலோசித்தனர். ஈற்றில் கட்டளைக்குரவரின் ஆசீரோடும், செபத்துடனும் கூட்டம் இனிதேகலைந்தது.

**அஸ்திவாரக்கல் நடுதல் :**

நமதுபங்கில் பிரபல்லியம்பெற்று விளங்கும் வயோதிபர்தாபனத்தின் சிற்றாலயத்துக்குச் சென்ற 12-8-58 செவ்வாயன்று பிற்பகல்5மணியளவில் அஸ்திவாரக்கல் நாட்டும்வைபவம் நடந்தேறியது. கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் வயோதிபர்தாபனங்களின் அதிசிரேஷ்டதாயார், இத்தாபனத்தின் தலைமைத் தாயார் சமேதராய்க் கன்னியாஸ்திரிமாரும், வயோதிபரான ஆண்கள் பெண்களும், பங்குக்கிறீஸ்தவர்களும், மற்றும்பிரமுகர்களும் கூடித் திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி, எஸ். ஜே. ஆண்டவர்அவர்களை வரவேற்றனர். அவ்வேளை புளியந்தீவு, புளியடிக்குடா, கல்லாறு, கல்முனைக்கட்டளைக்குரவர்களும், அர்ச். மிக்கேல் கல்லூரியைச்சேர்ந்த குருமாரும் சமுகமளித்தனர். தாண்டவன்வெளிப்பங்குப் பூசைப்பரிசாரகர்களும், பாடகர்களும் இவ்வைபவத்தில் பங்கெடுத்துக்கொண்டனர். ஆண்டவர்அவர்கள் ஆசாரியஉடைகள்அணிந்து, தாண்டவன்வெளிப் பங்குக்குரவர்சமேதராய் அஸ்திவாரக்கல் நாட்டுதற்கான திருச்சடங்குகளைநிறைவேற்றி அதனைநாட்டிவைத்தனர். அவ்வேளை பிரதிமைப் படங்கள்பல பிடிக்கப்பட்டன. அதன்மேல் மேற்றிராணியாண்டவரால் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்னர் ஆண்டவரவர்கட்கும், குருப்பிரசாதிகட்கும், பூசைப்பரிசாரகர், பாடகர்கட்கும் தேநீர்விருந்து வயோதிபர்தாபனக் கன்னியர்களால் அளிக்கப்பட்டது. ஈற்றில் எல்லோரும் நன்றிகூறிக் கலைந்தனர்.

**80-வது பிறந்த பெருநாள் :**

நமதுபங்கில் நெடுங்காலமாக உபதேசியாராகத் தொண்டாற்றிவந்த திரு. யோசெவ் ஐயாத்துரைஅவர்கள் தேவதாயார்பரலோகத்துக்கு ஆரோபணமான திருநாளாகிய சென்ற 15-8-58வெள்ளியன்று தமது 80-வது பிறந்தபெருநாளைக் கண்டுகளித்தனர். இப்பங்கிலுள்ள அர்ச். சவேரியார் சேவாசங்கத்தினருள் ஒருவரானஇவரைக் கண்ணியப்படுத்துமுகமாகச் சங்கஅங்கத்தினர் அவர் எப்பொழுதும் அணியும் ஓர்கறுப்புடையை ஆயத்தம்செய்தனர். எல்லோரும் முதற்பூசையின்பின் ஒன்றுகூடி அவரதுஇல்லஞ்சென்று அவ்வுடையை அவருக்குஅணிவித்து, ஊர்வலமாக ஆலயத்துக்கு அழைத்துவந்தனர். பின்னர் இரண்டாம்பூசை பாடற்பூசையாகக் கட்டளைக்குரவரால்நிறைவேறியது. எல்லோரும் ஏகோபித்து உபதேசியாரின் ஆன்ம,சரீரநலன்களுக்காக வேண்டிக்கொண்டனர். பூசை முடிவில் கட்டளைக்குரவரால் பங்கின் சார்பிலும், அர்ச். சவேரியார்சேவா சங்கத் தலைவரால் சங்கத்தின்சார்பிலும் உபதேசியாருக்கு மாலைகள் அணிவிக்கப்பெற்றன. பின்னர் எல்லோரும்ஒன்றுகூடி அவரைக் கிளென்னி ஆண்பாடசாலைமண்டபத்துக்கு அழைத்துச்சென்றனர். ஆங்கு உபதேசியாரின்சேவைநலம்பாராட்டிச் சேவாசங்கத்தின் தலைவரால் ஓர்சொற்பொழிவாற்றப்பட்டது. உபதேசியார் எல்லோருக்கும் நன்றிகூறிநின்றார். அதன்மேல் அர்ச். சவேரியார் சேவாசங்கத்தினரால் கட்டளைக்குரவருக்கும், அங்கத்தினர்க்கும் காலைப்போசனம் பரிமாறப்பட்டது எல்லோரும் இன்பமாய் விருந்துண்டனர். முடிவில் கட்டளைக்குரவர் திரிகோணமலை மேற்றிராசனத்தின்சார்பிலும், பங்கின்சார்பிலும் உபதேசியாரின் சேவைநலம் பாராட்டி நன்றிகூறித் தமதுஆசீரை அளித்தனர். எல்லோரும் உபதேசியாருடன் இன்னுரையாடிமீண்டனர்.

—நிருபர்.

## புதியமேயரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணநகர புதியமேயராகத் தெரியப்பெற்றிருப்பவரான திரு. அல்பிறெட் துரையப்பாஅவர்கள் தெரிவின் முடிவிலே தமக்குக்கூறப்பட்ட வாழ்த்துகளுக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில், ''நகரின் பொது அபிவிருத்திக்காக இயன்றமட்டும் பாடுபடுவதாக வாக்களிக்கிறேன்; இந்நகரின் குடிதண்ணீர்த்திட்டத்தில் நான்முக்கிய கவனம் செலுத்துவேன்; இதற்காக எனதுசொந்தச்செலவிலே கொழும்புக்குச்சென்று அரசாங்கஅதிகாரிகளுடன் கலந்துபேச உத்தேசித்திருக்கிறேன்; சாதி, சமய, கட்சி வேறுபாடில்லாது நகரின் பொதுநலத்துக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் ஒத்துழைக்கவேண்டுமென்று எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்; முக்கியமாக நகரசபைஅதிகாரிகள் வரிசெலுத்துவோரைத் திருப்திசெய்யும்முறையில் புகார்களுக்குஇடமின்றி நடந்துகொள்ளவேண்டும்; புகார்களுக்கு இடம்வைக்கிறவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன்'' எனக்கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## அகதிகளான எண்மர் குருப்பட்டம் பெற்றனர்

செஞ்சீனுவிலிருந்து தப்பியோடிய எட்டுக் குருத்துவ மாணவர்கள் ஹொங்கோங்தீவிலே சமீபத்தில் பியான்சி மேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கிருர்கள். புதிய குருமார்எண்மரும் ஹொங்கோங்கிலே அகதிகளாகச் சென்று அடைக்கலம்புகுந்து அத்தீவிலே அபர்டீன் பகுதியில் ஐரிஷ் யேசுசபைக் குருமாரால் நடத்தப்பட்டுவரும் பிரதேசகுருமடத்தில் தங்கள் வேதசாஸ்திர படிப்புகளைத் தொடர்ந்து படித்து முடித்தார்கள். தற்போது இவர்கள் மலாயா, சறவாக், போர்மோசாவிலும், ஹொங்கோங் மிஷன்களிலும் தொண்டாற்றுமாறு நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

---

## நிலத்தின்கீழ் வாழும் மக்கள்

பசிபிக் சமுத்திரத்திலுள்ள ஓர்ச்சிட்தீவுக்கு அந்திரே வெரினு மேற்றிராணியார் அன்று வள்ளம்ஒன்றில் சென்ருர். அவ்வாறு சென்றவர் பிறகு நீந்திக்கொண்டு திரும்பக் கரைவந்து சேரலாயினர். இவரும், இவரோடுசென்ற மற்றிரு குருமாரும் அத்தீவிலிருந்து திரும்பிவந்த மீன்பிடிப் படகு கவிழ்ந்தமையால் மூவரும் தண்ணீரில் தூக்கியெறியப்பட்டார்கள். அதிர்ஷ்டவசமாய்க் கரை அதிகம்தூரத்தில் இருக்கவில்லை. சுதந்திரசீனுவின் இருப்பிடமாகிய போர்மோசா தீவைச்சேர்ந்த ஹவாலியன் தீவைப் பரிபாலனஞ் செய்துவருகின்ற வெரினு மேற்றிராணியார் ஓர் கோவிலை ஆசிர்வதிப்பதற்காக ஓர்ச்சிட்தீவுக்குச்சென்றிருந்தார். இத்தீவில் வாழும் பூர்வீக குடிகளான 1,40,000 மக்களும் அங்கே கொடிய சூறைக்காற்று அடிக்கடி வீசிவருவதையிட்டு நிலத்தின்கீழ் சஞ்சரித்து வருகிருர்கள்.

---

## லூர்தைப்பற்றிச் சந்தேகிக்கவேண்டாம்

லூர்துபதியில்நடந்தேறும் அற்புதங்களின்உண்மையை அங்கீகரிக்க மறுக்க வேண்டாமென்று ஜேர்மனியிலே ஒல்டன்பேர்க் நகரின் முன்னைநாள் லூத்தேர்சபை மேற்றிராணியாரான டக்றர் வில்ஹெல்ம் ஸ்ரேலின் அவர்கள் புருெட்டஸ்தாந்தர்களுக் கெல்லாம் கூறுகின்ருர். தாமே பிரசுரஞ்செய்துவருகின்ற "குவாட்ரெம்பர்" என்ற சஞ்சிகையில் வெளியிட்டுள்ள கட்டுரைஒன்றில் இவ்வாறு அவர் கூறுகின்ருர். அதிலே இற்றைக்கு இருவருடங்களின்முன் தாமேசென்று லூர்துபதியைத் தரிசித்ததையும் அவர் குறிப்பிட்டிருக்கின்ருர்.

"புருெட்டஸ்தாந்தராகிய நாம் லூர்துபதிக் காட்சிகள் மட்டில் எப்போதும் குறைவாகத் தீர்மானிக்கும் போக்குடையவர்களாயிருக்கிருேம்; அங்கே விக்கிரகாராதனை நடைபெறுகிறதெனச் சந்தேகித்துச் சிந்தனையின்றிச் சொல்வது பிறர்சிநேகக் குறைவும், அநீதியும், மதியீனமுமாகும்; ருேமான்கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவர்களிலே பயபக்தியுள்ளவர்கள் பரலோகசம்பந்தமானகாட்சிகளைக்காணும்போது -- பரிசுத்த கன்னிமரியம்மாளின் காட்சிகளைக்காணும்போது நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை; அத்தகைய பரலோககாட்சிகளின் உண்மைத்தன்மை ஆட்சேபனைக் கிடமாவதில்லை" என்றும் அவர் எழுதியிருக்கின்ருர்.

---

## கன்னியாஸ்திரியான யூதப்பெண்

முன்னர் ஓர்யூத சமயத்தவளாயிருந்த சங். எடித் ஸ்ரீன் என்ற கார்மேல்சபைக் கன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுமாறு ஜேர்மனிய கத்தோலிக்க ஆசிரியைகள் சமாஜம் முயற்சித்துவருகின்றது. இந்தச் சமாஜத்தைச்சேர்ந்த ஆயிரம்அங்கத்தவர்கள் இதுவிஷயமாகப் பரிசுத்தபிதாவுக்கு மனுப்பண்ணிக் கொள்ளச் சம்மதவாக்களித்திருக்கிருர்கள். எடித் ஸ்ரீன் ஓர் தத்துவசாஸ்திர கலாநிதியும், கல்வி சம்பந்தமாகப் பெரிய எழுத்தாளியுமாக விளங்கியிருந்தாள். 1942-ம் ஆண்டு இவள் ஜேர்மன் நாஸிகளாலே நச்சுப்புகை அறையொன்றில்விட்டுக் கொலைசெய்யப்பட்டாள். 1922-ம் ஆண்டு தனது 31-ம் வயதிலே யூதசமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையைத் தழுவி, ஒன்பது வருடங்களின்பின் ஒல்லாந்திலே எச்ற் எனுமிடத்திலுள்ள கார்மேல்சபை மடத்தில் சேர்ந்து புனிதவாழ்க்கை நடத்திவந்தாள். நாஸிகள் ஒல்லாந்திலே படையெடுத்தபோது அவர்கள் இவளைக் கைதுசெய்து, போலாந்தில் கொண்டுபோய்க் கொலைசெய்துவிட்டார்கள். கன்னிகாசபையிலே இவளின்நாமம் சிஸ்றர் தெரேசா என்பதே.

---

## குருடர்களின் திருயாத்திரை

பிரித்தானியிலும், அயர்லாந்திலுமிருந்து ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்ட குருடர்களின் லூர்துபதித் திருயாத்திரை ஒன்று சமீபத்திலே நடைபெறலாயிற்று. இதிலே 48 குருடர்கள் கலந்துகொண்டார்கள். இது தேவபராமரிக்கையின் புதல்வர்சபைக் குருமாரால் ஒழுங்குபடுத்தப்பட்டது. இங்கிலாந்திலே அவர்களின் சிரேஷ்டரான வண. போல் பின்டன்சுவாமியார் இந்தயாத்திரிகர்களுடன் சென்ருர். நோயாளர் 30 பேரும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். இத்தாலியிலே ரொன்ரோனு நகரிலிருந்து தேவதிரவியானுமான சபையைச் சேர்ந்த குருடர்களான இரு கன்னியாஸ்திரிமாரும், மாறிஸ்ற் சபையைச் சேர்ந்தவராய்ச் சமீபகாலத்திலே தமது பார்வையை இழந்தவரான சங். போல் எற்வாட் பிறதரும், இலங்கையிலிருந்துபோன ஓர் குருட்டுப் பெண்பிள்ளையும், ஓர் பாலியனுயிருக்கையில் பார்வையற்றுப்போன திரு. ஜே. பிருட்லிஎன்ற ஆங்கிலேயரும் குருடர்களான இந்த யாத்திரிகர்கள் மத்தியில் காணப்பட்டார்கள். திரு. பிருட்லியின் எட்டாவது லூர்துபதி யாத்திரை இதுவாகும்.

---

## 13 வயதுப் பாலியனின் அரிய சாதனை

பரிசுத்த பாப்பரசர் அன்று வெள்ளிக்கிழமை வழமையில்இல்லாதவகையிலே தரிசகர்ஒருவருக்குப் பேட்டியருளலாயினர். பாப்பரசின் சரித்திரத்தைப்பற்றிய கேள்விகளுக்கு 'ரெலிவிஷன்' மூலம் பதிலளித்து 5,000 கிறவுண் வெற்றியீட்டிய 13 வயதுடைய ஓர்சுவீடன்நாட்டுப் பாலியனே இந்தத்தரிசகன். ஸ்ரொக்கோம்நகரில் பிரசுரமாகும் பத்திரிகைஒன்று இவன் ருேமாபுரியில் தனது விடுமுறையைக் கழிப்பதற்குவேண்டிய செலவைப் பொறுக்கலாயிற்று. பாப்பரசர் இந்தப்பாலியன் வழமைக்கு மாருக மேற்கொண்ட கருமத்தையிட்டுத் தமக்குண்டான மனோகவர்ச்சியைத் தெரிவித்து, 'ரெலிவிஷன்' பரிசிலை வெற்றிகொண்டதற்காக அவனைவாழ்த்திக்கொண்டாடினர். இவன் சமீபகாலத்திலே பாப்புமாரைப்பற்றிய மற்ருேர் 'ரெலிவிஷன்' கேள்விக்கும் பதிலளிக்கவிருக்கின்ருன். இதிலேஅவன் வெற்றிபெறுமிடத்துப் 10,000கிறவுண் பரிசிலாகப்பெறுவான்.

---

## பன்னிரண்டாம் ஆண்டு நிறைவு தினம்

நவமான அற்புதவரத்தியெனக் கொண்டாடப்படுகின்ற சங். அல்போன்சா கன்னியாஸ்திரி பரமபதமடைந்த 12-ம் ஆண்டுநிறைவு ஞாபகதினம் சென்ற ஆடிமாதம் 28-ந் திகதி திங்கட்கிழமை பாரனங்கானத்திலே கொண்டாடப்படலாயிற்று. இம்முறை ஓர் விசேஷ நிகழ்ச்சியாக, கம்யூனிஸ்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும் கேரள இராச்சியம்முழுவதும் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும், விசேஷமாய்க் கல்வி ஸ்தாபனங்களிலும் காட்டுத்தீபோன்று பரந்துகொண்டிருக்கின்ற விவாதங்களும், குரோதங்களும், போராட்டங்களும் ஒழிந்து சமாதானம் உண்டாகும்படியாகத் தினமும் பெரியபாடற்பூசையுடனும், பிரசங்கத்துடனும்கூடிய நவதின உற்சவங்கள் நடைபெறலாயின. சுகாத்தியம் அதிகம் நன்ருயிருந்தபோதிலும் முன் வருடங்களிற்போன்று முதல்நாளிரவு யாத்திரிகர்கள் திரளாகவந்துசேரவில்லை. ஓர்காலம் அமைதியும், சமாதானமும் நிலவியிருந்த கேரளஇராச்சியத்திலே இன்று மக்களுக்கோ, சொத்துகளுக்கோ தகுந்த பாதுகாப்பில்லாது எங்குமே சட்டத்துக்கும், கட்டுப்பாட்டுக்கும் அடங்காதநிலைமை ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். ஆனல், நிறைவுஞாபகதினமாகிய 28-ந் திகதியன்று காலை 7 மணி முதல் பக்தர்கள் பெருந்தொகையாக வந்துசரியத் தொடங்கிப் 10 மணிக்கெல்லாம் அவர்கள் தொகை இருபதினுயிரம்பேருக்கு அதிகமாகிவிட்டது. சிலபொலிசரும் வந்திருந்தனர். ஆயிரக் கணக்கிலே வந்துகூடிய யாசகர்களைக் கட்டுப்படுத்திக்கொண்டிருந்ததைத்தவிர, வேறுவேலை அவர்களுக்கு இருக்கவில்லை. இம்முறையும் சங். அல்போன்சா கன்னியாஸ்திரியின் சலுகையை அநேகர் பெற்றுக்கொண்டதாக அறிக்கையிடப்படுகிறது. இம்முறை நேர்த்தி செலுத்தியவர்களின்தொகையும் முந்திய முறைகளிலும் அதிகமாயிருந்தது.

---

## சத்துராதிகள் முன்னேறுகிருர்கள்

லிவர்ப்பூல்நகரின் ஹீனன்அதிமேற்றிராணியார் அன்று நடைபெற்ற ஓர்யாத்திரையின்போது பேசியவிடத்து: "கடவுளின் சத்துராதிகள் முன்னேறுகின்ருர்கள்; ஐரோப்பாவிலோ, அன்றேல் பிரித்தானிய இராச்சியத்திலோ அடுத்த இருபதுவருடங்களில் என்ன நடக்குமென்று யார் சொல்லக்கூடும்? நம்மைப்போல அதேவிதமாக இற்றைக்கு இருபது வருடங்களின்முன் சீவித்து, நம்மைப்போலவே சிந்தித்த மக்கள் தற்போது கம்யூனிஸ்தநுகத்தின்கீழ் கிழக்கு ஐரோப்பாவில் அடிமைப்பட்டுக் கிடக்கின்ருர்கள்; ஆனல், இன்றுநடக்கும் போராட்டம் கத்தோலிக்கருக்கும், புருெட்டஸ்தாந்தருக்குமிடையிலன்று; சகலசமயத்தவர்களுமே — சமயநம்பிக்கையுடையவர்கள் சகலருமே தற்போது கடவுளுடைய சத்துராதிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்கள்" எனக் கூறியிருக்கின்ருர்.

---

## மாணவர்களின் யாத்திரை

மத்தியகாலங்களின் யாத்திரைக்கூட்டங்களைநிகர்த்தயாத்திரிகர்கள் குழாம்ஒன்று பிரான்ஸிலே பொயிற்றியேர்ஸ் பகுதியைச் சேர்ந்த பார்தனேஎன்ற சிறுபட்டினத்திலிருந்து கொம்பொஸ்தெல்லா எனுமிடத்திலுள்ள அர்ச். பெரியயாகப்பரின் ஸ்பானிய திருசேத்திரத்திற்குக் கால்நடையாகச் சமீபத்திலே புறப்பட்டிருக்கிறது. இருஇடங்களுக்குமுள்ள இடைத்தூரம் 900 மைலுக்குமேலாகும். இந்தயாத்திரிகர்கள் பரீஸ்நகர சர்வகலாசாலை மாணவர்களே. முடவர்களும், நோயாளருமான அநேகமாணவர்கள் இந்தயாத்திரையிலே கலந்துள்ளார்கள். பலநூற்ருண்டுகளுக்குமுன் பார்தனேபட்டினத்தின் பங்குக்குரவர்ஒருவரால் படம்போடப்பட்ட பாதைவழியாக இவர்கள்பிரயாணஞ்செய்துவருகிறபுரட்டாசிமாத ஆரம்பத்தில் கொம்பொஸ்தெல்லா திருசேத்திரம்போய்ச்சேர எண்ணியிருக்கிருர்கள். இவர்களின் பயணப்பொதிகள் பழைய குதிரைக் கரத்தைஒன்றில் கொண்டுசெல்லப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணிமாதம்

பொதுக்கருத்து: மாக்ஸிய (பொதுவுடைமை) கொள்கைகளின் தவறுனபோக்கையும், ஆபத்துகளையும் அனைவரும் நன்குணர்ந்து, அவற்றை வெறுத்துத் தள்ளுவதற்காக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: நைஜீரியாவில் உண்மையான கிறீஸ்துவவாழ்க்கை மலரும்படியாக மன்றாடிக்கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
ஆவணி மாதம் 21-ந் திகதி


## தமிழர்களின் கஷ்டகாலம்

தமிழ்மக்களுக்கு இன்று பெருங்கஷ்டகாலம், இல்லை, கடுஞ்சோதனைகாலம். ஒன்றின் பின்ஒன்றாகப் பலநெருக்கிடைகளும், நெருக்கடிகளும் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருக்கும் காலம். ஆனால், எவருமே கவலைப்படவேண்டியதில்லை. கலக்கமுற வேண்டியதுமில்லை. "வல்லகுருநாதன் எம்மைவருத்துவது கொல்லவல்ல, கொல்லவல்ல, பொல்லாக்குணம்போக்க"என்பதை எல்லோரும் மனதிற்கொண்டு மனஞ்சோராது, கடவுளைநம்பிக்கொண்டு, அவர் திருவருளைமேற்கொண்டு துணிகரமாகவும், மதியூகமாகவும் செயலாற்றிவரின் வெற்றிகாணலாமென்பது நிச்சயம். நமது அரசாங்கஅதிபர் திரு. எம். ஸ்ரீகந்தாஅவர்கள் அன்றொருநாள் கூறியதுபோல, "எந்தக்காலத்திலும் ஏற்பட்டிராத மிகநெருக்கடியான பொருளாதாரமந்தம் யாழ்ப்பாணத்துக்குத் தற்போது ஏற்பட்டிருக்கிறது; அதைக் கண்டு நாம் மனம்தளர்ந்துவிடாது மாற்றுவழிகள்மூலம் நிலைமையைச் சீரடையச்செய்ய வேண்டும்; இந்தநெருக்கடியைப்போக்கச் சிக்கனவாழ்வு அத்தியாவசியமானது"

அரசாங்கஅதிபர் கூறியதுபோல் இன்று தமிழ்மக்களுக்குச் சிக்கனவாழ்வு– ஒறுப்பனவான சீவியம் அத்தியாவசியகம் வேண்டற்பாலதாகும். இரண்டொரு தலைமுறைகளுக்குமுன் நமது முன்னோர் சிக்கனமான வாழ்க்கைநடாத்தி வந்தமையாலேயே தமிழர்களாகிய நாம் இன்று தமிழர்களாக விளங்குகின்றோம். உணவிலேகட்டுமட்டு, உடையிலேகட்டுமட்டு, செலவுசித்தாயங்களிலே கட்டுமட்டு, பொழுதுபோக்குகளிலேகட்டுமட்டு, குடும்பவாழ்க்கையிலே கட்டுமட்டென்று பலவிதகட்டுப்பாடுகளோடு வாழ்ந்துவந்தமையாலேயே அவர்கள் கஷ்டமின்றிக்காலத்தைப்போக்கியும், கல்வியறிவாலும், காணிபூமிகளாலும் தங்கள் பிள்ளைகளை நிலைபரமாக்கியும் வந்துள்ளார்கள். இயற்கையோடமைந்த வாழ்க்கையும் அவர்களின் ஒறுப்பனவான சீவியத்துக்கு ஓர்அச்சாரமாயிருந்தது. அவர்கள் ஒருவேளை உணவையே நெல்லரிசியுணவாகவும், மற்றிருவேளை உணவுகளையும் குரக்கன், சாமை, வரகு, பனம்பண்டம், கிழங்குவகை உணவுகளாகவும்கொண்டு கஷ்டமின்றியும் பணமுட்டின்றியும் வாழ்ந்து—கூடிய சுகபலத்துடனும்,நீடியஆயுசு பலத்துடனும் வாழ்ந்து வந்தார்கள். ஆனால், அந்தக்காலம் இன்றுமலையேறிவிட்டது. குரக்கன், சாமை, பனம்பண்டம் ஆதியனவெல்லாம் சோட்டைப் பண்டங்களாக மாறிக்கொண்டன. ஆதலால் நாம் உணவுவிஷயமாய் இயற்கையோடமைந்தவாழ்க்கை நடாத்தி நமது பொருளாதாரத்தை விருத்திசெய்துகொள்ள வேண்டும்.

இன்னும் உடை விஷயமாகவும் நவீனநாகரீக முறைகளைப் பின்பற்றுவதைநிறுத்தி—துணிமணிகளிலே கண்டபடியெல்லாம் கையிலுள்ள பணத்தை அள்ளியிறைப்பதைநிறுத்தி – நிலைமைசீர்திருந்துகிறவரையிலாவது நிறுத்தி–அவ்வாறே உண்டாட்டுக் களியாட்டுகளிலும், ஆடம்பரகொண்டாட்டங்களிலும், வீண்பொழுதுபோக்குகளிலும், விநோதப் பிரியங்களிலும் விழலாகப்பணத்தை விரயஞ்செய்வதை நிறுத்தி நமது பொருளாதாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள முன்வரவேண்டும்.

மேலும் வருங்காலத்திலே தமிழ்மக்கள் அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளியின் செயலாகவே இருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. ஆதலால் "தன்கையே தனக்குதவி" என்பதை அனைவரும் மனதிற்கொண்டு மனஞ்சோராது, காலத்தை வீணேகழிக்காது, தொழிலிலே பெருமை சிறுமையைக் கவனியாது ஏதேனும்ஒருமுயற்சியில் ஈடுபட்டு நமதுசீவியத்தை மரியாதையாக நடத்தினாலே போதுமென்ற மனப்போக்குடன் வாழ்ந்து வர முயற்சிக்கவேண்டும். இன்றைய நிலைமையிலே நமது பொருளாதார விஷயமாய் நம்மைவழிநடத்தக்கூடிய அரசாங்க அதிபர் ஒருவர் நமக்குக் கிடைத்திருப்பதும் ஓர் நல்லதிர்ஷ்டமே எனலாம். அவரது ஆலோசனைகளை நாம் மேற்கொண்டு கமத்தொழிலில், குடிசைத்தொழிலில், ஆடு மாடு கோழிகள் வளர்த்தலில், மற்றும் தொழில் துறைகளில் கஷ்டத்தைப் பாராது, பிரயாசைக்கஞ்சாது தலையிட்டு உழைத்து வருவோமானால் நமது வருங்காலம் சுபீட்சம் நிறைந்த சுபகாலமாய்த் துலங்குமென்க.

---

### மரியாயின்சேனை வெளிவிழா

யாழ்ப்பாணம், பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதா கோவிலைச்சேர்ந்த மரியாயின் சேனை ஆண்கள்முதியோர் சைனியம், பெண்கள்முதியோர்சைனியம், பெண்கள்பாலர்சைனியம் ஆதியவற்றைச்சேர்ந்த அங்கத்தவர்கள் சென்ற 16-8-58 சனிக்கிழமை பண்டத்தெருப்பு, பாத்திமாமாதா திருசேத்திரத்தில் வெளிவிழாவை இனிதேகொண்டாடினர். அன்றுகாலை யாவரும் திருசேத்திரத்தைஅடைந்து வழமையான சேனைச்செபங்கள், பத்திமுயற்சிகளைச் செய்து, பகல்போசனத்தைமுடித்து, பண்டத்தெருப்புக் கன்னிகாமடம் முதலியவைகளைப் பார்வையிட்டுக் கொண்டு, பண்டத்தெருப்புக் கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ்சுவாமி அவர்களின் [illegible] திரும்பினர்கள்.

## புதியகுரவரின் முதற்பூசை

ரோமாபுரியிலே விசுவாசப்பரப்புதல் குருமடத்தில் வேதசாஸ்திரங்கற்று, அங்குதானே சென்ற மார்கழிமாதம் குருப்பட்டம் பெற்றுக்கொண்டவரான வண. அன்ரன் திலகரட்ணம் இராசநாயகம்சுவாமியவர்கள் அங்கிருந்தும் சென்றதிங்கட்கிழமை தனது சென்மநாடுவந்து சேர்ந்தபோது, யாழ்ப்பாண றெயில்வேஸ்ரேஷனிலே பலகுருமாரும், இனசனரும் காத்துநின்று அவரை வரவேற்று மேற்றிராசன மாளிகைக்கு அழைத்துவந்தார்கள்.

மறுநாளாகிய செவ்வாய்க்கிழமைகாலை 7-30 மணிக்குப் புதியகுரவர் மேற்றிராசனமாளிகையிலிருந்து தமதுபெரியதந்தையாரான வண. வில்லியம் பி. யேசுதாசன் சுவாமியவர்களை உதவிக் குரவராகவும், வண. எச். ஜெஸ்லான்ட், வண. ஜே. பி. இம்மனுவல் செல்வராசா என்னும் குரவர்கள்இருவரையும் தியாக்கோன், உபதியாக்கோனாகவும் கொண்டு ஊர்வலமாகப் பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலையடைந்து, அங்கே குருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரிமாரும், இனசனரும், மற்றும் விசுவாசிகளுமாகப் பெருந்திரளானோர் குழுமியிருந்தசமுகத்திலே தமதுசெனனபூமியில் முதன்முறையாகப் பெரியபாடற்பூசை நிறைவேற்றியபோது உண்டான பக்திப்பரவசமோ பகருந்தரமன்று.

பூசையிலே சுவிசேஷமுடிவில் சென் என்றீஸ் கல்லூரிஅதிபரும், கலாநிதியுமான வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்கள் பிரசங்கபீடத்தெழுந்து, "என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது: என்இரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தில் என்மனமும் ஆனந்தமாய்எழும்பி மகிழ்கின்றது...... ஏனெனில், வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினர்" என்ற மாதாவின் புகழ்ச்சிமொழிகளை ஆதாரமாகக்கொண்டு, பரமதிரித்துவத்துக்கும் குருவானவருக்கும், திருச்சபைக்கும் குருவானவருக்கும், மனுக்குலத்துக்கும் குருவானவருக்கு மிடையிலுள்ள தொடர்புகளையெல்லாம் தித்திக்கும் செந்தமிழிலே, தெள்ளியநடையிலே, சிந்தைகுளிர, உணர்ச்சிவெள்ளம்பெருக, வெள்ளிடைமலைபோல் விளக்கிக் காட்டிப் பிரதாபமிகுந்த குருத்துவத்தின் மகத்துவத்தையும், வல்லபத்தையும், அதிகாரத்தையும் பலஉதாகரணங்களுடன் அழுத்தமாக எடுத்துக்காட்டி, "குருவானவர்உங்களிடையே தெரிந்துகொள்ளப்பட்டவர்; அவரும்பலவீனர்; அவரும்மனிதர்" என்பதை இனிதே புலப்படுத்தி, குருமாருக்காக எப்பொழுதும் மன்றாடிவரும்படியாக எல்லோரையும் பரிவாகக்கேட்டுப்புதிய குரவருக்கும், அவரின் அருமைத்தாயார், சகோதரங்களுக்கும்,மற்றும்உறவினருக்கும் வாழ்த்துக் [illegible]போலும் தமது பிரசங்கத்தை முடித்துநின்றார்.

பூசையின்போது புதியகுரவர் தமதுகரங்களால் முந்தமுந்தத் தம்முடையதாயாருக்கும், சகோதரங்களுக்கும் திவ்வியநன்மை அருளியதும் ஓர்உருக்கமான காட்சியாயிருந்தது. பூசைமுடிவில் சுவாமியவர்கள் "தெதேயும்"என்ற தேவதோத்திர கீதம் பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். அதன்மேல் பலருஞ்சென்று அவரின் அபிஷேகதிருக்கரங்களை முத்தமிட்டு ஆசிபெற்றார்கள்.

சாயந்தரம் 5மணிக்குச் சம்பத்திரிசியார்கல்லூரி வீதியிலுள்ள தமதுஇல்லத்திலே அவருடைய தாயார் தம்முடைய குருபுதல்வருக்கு ஓர்பரிமளிப்பான வரவேற்புஉபசாரம் நடத்தினர். புதியகுரவர் தமதுபெரியதந்தையார், மற்றும்பலகுரவர்கள் சமேதராய் அங்குசமுகமானபோது, அவ்விடம்திரளாகக்கூடி அவர் வரவை எதிர்பார்த்திருந்த சுற்றத்தவர்களும், அன்பர்களும், மற்றும்பிரமுகர்களும் மலர்மாலை சூட்டி ஆனந்தமாக அவரைக் கௌரவித்துநின்றார்கள். அத்தருணம்நடைபெற்ற பெருமிதமான உபசரணையின்போது சம்பத்திரிசியார்கல்லூரிப் பேராசிரியர்களில் ஒருவரான ஸ்ரீ எவ். என். சி. சவிரிமுத்துஅவர்களும், பரிமேலர் எஸ். அருளானந்தம்அவர்களும் புதியகுரவரின் கல்வித்திறமையையும், அவர்தேவஅழைத்தலைமேற்கொண்டு குருத்துவபதவிக்குத் தம்மைஅர்ப்பணஞ்செய்தமையையும், அவருடைய குருத்துவஅழைத்தல் விஷயமாய் அவர்பெற்றோர் செய்துள்ள அருந்தியாகங்களையும் பாராட்டி, அவர் யாழ்ப்பாணத்திருச்சபை உத்தியானத்திலே ஆன்மாக்களின் இரட்சணியத்துக்காக அருந்தொண்டாற்றிவர அருள்பாலிக்குமாறு தேவாசியை இரந்துநின்றார்கள். புதியகுரவர் அனைவர்க்கும் நன்றிகூறினர். தமதுஅன்பான அருமைத்தந்தையார் இச்சுபதருணத்தில் சமுகமாயிருக்கத் தாம்கொடுத்துவையாதபோதிலும், இந்தவேளை அவர் பரலோகத்திலிருந்துகொண்டு, இங்குநிகழ்வதை ஆனந்தத்துடன் நோக்கி இன்புறுவாரெனக்கூறி மனமாறினர். தம்மைக் குருத்துவஅந்தஸ்தின் கொடுமுடியை நோக்கி வழிநடாத்தியவர்களுக்கும், விசேஷமாய் அப்பதவியை அடையத் தமக்கு ஓர்உன்னத மேல்வரிச்சட்டமாய் விளங்கியிருந்த தமதுபெரியதந்தையாரான சுவாமிகளுக்கும் துதிகள்சாற்றினர். ஈற்றில் அரிதேதாம்அடைந்துகொண்ட பதவிக்குரியகடமைகளைச் சரிவரநிறைவேற்றிவருமாறு தமக்காகமன்றாடும்படி கேட்டு ஞாபகசின்னங்கள்வழங்கியதோடு வரவேற்புஉபசாரம் இனிதேநிறைவாயிற்று.

---

பிரான்ஸிலே நிகழும் ஆவணிமாதம் 5-ந்திகதியன்று காலஞ்சென்ற தமது அருமைத்தந்தையாரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக் கொள்ளுமாறு நல்லூர்க்கட்டளைக் குரவரான வண. எச். ஜெஸ்லான்ட் சுவாமியவர்கள் தமது சகோதர குருப்பிரசாதிகளையும், ஏனையோரையும் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றார்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த அமலோற்பவிசபைக் குருமாரின் வருடாந்த முதலாவது பிரிவான ஞானவொடுக்கம் சென்ற செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஆரம்பமாயிற்று. 35 குருமார் வரையிலே இதற்குச் சமுகமளித் திருக்கின்றனர். விக்கார் ஜெனறலாகிய மிகவண. எச். லெக்குத்தூர் சுவாமியவர்கள் ஞானவொடுக்க போதகஞ் செய்கின்ருர்.

### குருப்பட்டாபிஷேகம்

நாம் முன்னர் தெரிவித்திருந்த பிரகாரம் வண. சி. பனிமயம் லோப்பையா பிறதரும், வண ஒஸ்வால்ட் வூல்ஸ்றன் பிறதரும் சென்ற 14-ந் திகதி வியாழக் கிழமைகாலே 7-30 மணிக்குக் கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள லங்கா மாதா தேசீயகுருமடத்துச் சிற்ருலயத்திலே கண்டிமேற்றிராணியாரான மகாவந். டி. பேர்ணுட் றெஞ்ஞோஆண்டவரால் குருத்துவாபிஷேகம் செய்யப் பெற்ருர்கள். அவ்வேளை குருமடத்தைச்சேர்ந்த குருமாரும், குருத்துவ மாணவர்களும், புதிய குரவர்களின் பெற்ருேரும், சுற்றத்தவர்களும், மற்றும் அன்பர்களும் ஆலயத்தில் திரளாகச் சமுகமளித்திருந்தார்கள். மறுதினம் வண. லோப்பையா சுவாமியார் அதேசிற்ருலயத்திலும், வண. வூல்ஸ்றன்சுவாமியார் அண்மையிலுள்ள கன்னிகாமடத்துச் சிற்ருலயத்திலும் தங்கள் முதற்பூசைப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள்.

### மருதமடு ஆவணித்திருநாள்

பரிசுத்த தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமானதிருநாள் மருதமடுத்திருப்பதியிலே சென்ற 15-ந்திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. இலங்கையின் நாலு பகுதிகளிலும், தென்னிந்தியாவிலுமிருந்து சுமார்எழுபத்தையாயிரம் யாத்திரிகர்கள் இத்திருநாளிலே வழமைபோலப் பக்திப்பரவசத்துடன் கலந்துகொண்டார்கள். யாழ்ப்பாண மேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரும், சிலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மண்ட் பீரிஸ் ஆண்டவரும், அநேக குருப்பிரசாதிகளும் திருப்பதியில் சமுகமாயிருந்து யாத்திரிகர்களின் ஆன்மசரீர தேவைகளைக் கவனித்தார்கள். திருநாளன்றுகாலே சிலாப மேற்றிராணியார் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். பின்னர் மருதமடுச் செபமாலைமாதாவின் அற்புத திருச்சுரூபம் செபங்கள், தோத்திரகீதங்களுடன் ஒருமைல்தூரத்துக்கு வீதிகொண்டு சுற்றப்படலாயிற்று. சுற்றுப்பிரகாரம் மீளவும் ஆலயத்தை அடைந்ததும் அதுகொண்டு யாத்திரிகர்கள் ஆசீர்வதிக்கப்பெற்றுத் திருநாள் முடிவாயிற்று.

### புத்தபிக்குவின் உண்ணுவிரதம்

தமிழர்-சிங்களவர் ஒற்றுமைக்காகச் சென்ற 13-ந்திகதிமுதல முத்தினங்களாகக் கொழும்பிலே கனத்தைமைதானத்துக்கு எதிரேயுள்ள பெரியஆலமரத்தின்கீழ் உண்ணுவிரதமிருந்த அழுத்கம தர்மலோக தேரோஎன்ற வயதுமுதிர்ந்த புத்தபிக்கு வெள்ளிக்கிழமைகாலே 11-30மணிக்கு வவுனியாப்பிரதிநிதியும், அடங்காத்தமிழர் முன்னணித்தலைவருமான திரு. சி. சுந்தரலிங்கம்அவர்கள் வழங்கிய தானத்தை — அதாவது பாலையும், பழத்தையும்பெற்றுத் தமதுஉண்ணுவிரதத்தை முடித்துக்கொண்டார். பிக்குவும் திரு. சுந்தாலிங்கம் மிகவும் "நேர்மையான மனிதர்"என வர்ணித்துச் "சிங்களவர்-தமிழர் ஒற்றுமைச் சின்னம்" எனத் தமக்குவழங்கப்பட்ட பாலையும், பழத்தையும் தோத்திரங்களைப் பாடிய வண்ணம் பெற்றுக்கொண்டார். திரு. சுந்தரலிங்கம்வராமல் தமதுஉண்ணுவிரதத்தைக் கைவிடுவதில்லையென்று பிக்கு முன்னர்அறிவித்திருந்ததைப் பொலிசர் அவருக்குத்தெரிவிக்கவே, உடனே அவரும் பிக்குவிடம்சென்று படுக்கையிலிருந்தஅவர் எழுந்துஉட்காரவும், உடையைச் சரியாக உடுத்திக்கொள்ளவும் துணைச்செய்தபின் புத்த ஆசாரப்படி அவருக்கு வணக்கஞ்செய்தார். சிங்களவர்-தமிழர் ஐக்கியத்தை உண்டுபண்ணப் பாடுபடவேண்டுமென்று பிக்குஅவரைக்கேட்டு, இம்முயற்சியில் வெற்றிபெறுமாறு அவரைஆசீர்வதித்தார். பிக்குவின்விருப்பை நிறைவேற்றுவதாக அவரும் தெரிவித்து விடைபெற்றுத் திரும்பினர்.

### ஆசனக்கோவிலில் ஆவணித்திருநாள்

யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே ஆவணித்திருநாளென அறியப்படுகின்ற மாதாவின் மோட்சாரோபணப் பெரிய திருநாள் சென்ற 15-ந்திகதி வெள்ளிக்கிழமையன்று வெளியாடம்பரங்களின்றிப் பக்தியருட்சியாகக் கொண்டாடப்படலாயிற்று. திருநாளுக்கு முந்திய பதினைன்குஉற்சவங்களும் செபமாலை, பிரார்த்தனை, பிரசங்கம், சற்பிரசாத ஆசீர்வாதம், திருச்சுரூப எழுந்தேற்றம் ஆதியவற்ருலே பரிமளிக்கலாயின. திருநாளன்றுகாலே 7 மணிக்கு வண. எஸ். ஈ. நிக்கலஸ் குணசீலன் சுவாமியவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். சாயந்தாம் அதிவண. ஜே. புரேகான் சுவாமியவர்களால் வேஸ்பர்பாடிமுடிந்ததும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் திருநாள் நிறைவாயிற்று.

### காலநிலை

மப்பும், மந்தாரமும் அதிகமாகக் காணப்படுகின்றன. இடையிடையே புயலைப்போன்று ஓர்வித குளிர்காற்று உரமாக வீசுகின்றது.

---

● மிலான்நகர மொந்தினி அதிமேற்றிராணியாருக்குச் சமீபத்திலே பாப்பரசர்அனுப்பியுள்ள திருமுகம்ஒன்றிலே, புரொட்டஸ்தாந்தம், லோகாயதம், பிறிமேசன் ஆதியனவும், பிறசெல்வாக்குகளும்காரணமாகத் திருச்சபையைவிட்டுப் பிரிந்துபோனவர்களெல்லாம் திரும்பவும் அதில்வந்து சேரத்தக்கதாகக் கத்தோலிக்கரெல்லாம் அரும்பாடுபட்டுழைக்க வேண்டுமென்று தமக்குள்ளவிருப்பைத் தெரிவித்திருக்கின்ருர்.

* * *

● கருதினல்மார்திருச்சங்க தலைவரான கருதினல்திசரூன்ஆண்டவர் ரூேமாபுரியிலே சமீபத்தில் தமதுஐம்பதுவருடசேவையைப் பூர்த்திசெய்திருக்கின்ருர். இவர் சாதியிலே ஓர் பிரான்ஸியராய் இருந்தபோதிலும் தாம்குருப்பட்டம்பெற்ற சிறிதுகாலத்துக்குப்பின்முதல் அங்கேயே இவர் பணியாற்றிவந்திருக்கிருர். ஓர்மேற்றிராணியாராகுமுன்னரே ஓர்கருதினலாயிருந்துவந்த வழமையில் இல்லாத கௌரவத்தை இவர்பெற்றிருக்கின்ருர்.

---

## தெரேசாநியூமன் — திருக்காய வரம்பெற்ற மாது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சத்திரவைத்தியம் தவிர்க்கப்பட்டது

இதனைத்தொடர்ந்து ஒன்றின்பின்ஒன்ருக மனதுக்கெட்டாத அநேகஆரோக்கியங்கள் கிடைக்கலாயின. தெரேசா இப்போது கண்பார்வையற்ற ஓர்குருடிஅல்ல. ஆனல், கடுமையான நரம்புவலிகளும், சோர்ந்து விழுந்து மூர்ச்சிக்கச்செய்யும் வலிப்புகளும், கழுத்துவிரணங்களும், தாங்கமுடியாத தலைக்குத்துகளும், புரைகொண்டு சீழ்கட்டியபுண்களும் இன்னுமே குணமாகாது முன்போல இருந்துவரலாயின. அடுத்தபடியாக ஏற்பட்டகுணம் அவளின் இடதுபாதத்திலே புரைத்துச் சீழ்கட்டியிருந்த அழுகுபுண்ணுடன் சம்பந்தப்பட்டதாகும். 1925-ம்ஆண்டின்வைகாசிமாதத் தொடக்கத்தில் அப்பாதத்தை வெட்டிச் சத்திரவைத்தியஞ் செய்யவேண்டியது தவிர்க்கமுடியாததாகக்காணப்பட்டது. ஆனல், டக்றர் சீய்டில் சத்திரவைத்தியத்தில் இறங்குமுன் தெரேசாவின்சகோதரி சிறிய புஷ்பத்தின் கல்லறையிலிருந்து கொண்டுவரப்பட்ட சிலரோசா மலர்இதழ்களை அவளுடைய அழுகுபுண்ணைக் காயங்கட்டும் துணிகொண்டுசுற்றி மேலும் கீழுமாகக் கட்டியிருந்த இருகட்டுகளுக்குமிடையே வைத்தாலோ என்று சிந்தித்துக்கொண்டு அவ்வாறு செய்தாள். என்ன புதுமை! ரோசாமலர்இதழ்கள் வைக்கப்பட்டுச் சிலநிமிஷங்கள் செல்லாமுன்னரே அரைவருடகாலமாகத் தெரேசா அனுபவித்துவந்த வேதனைவருத்தமெல்லாம் மாயமாகஅகன்றுபோய் விட்டது. அந்தப்பயங்கர அழுகு புண்ணின்வாயும் பொருந்திமூடிக்கொண்டதுடன் அதன்மேலாக இளநீலவர்ண வெளித்தோற்றமுள்ள மிருதுவான தோலும் வளர்ந்திருந்தது.

(தொடரும்)

---

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 1958-ம் ஆண்டு ஆவணிமாதம் 25-ந் திகதி திங்கட்கிழமை காலே மிருசுவில், சங்கீக்கிலார் கோவிலில் திருவளர்செல்வன் எஸ். யோசெவ் செல்வநாயகத்திற்கும் (மிருசுவில், புகையிரதப் பகுதி), பாவிலுப்பிள்ளை ஜெருசலேம் சிறில் (நீர்ப்பாசனப் பகுதி ஓவசியர்) தம்பதிகளின் ஏகபுதல்வி திருவளர்செல்வி சிசில் அருள்சோதிக்கும் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேறவிருப்பதால், அத்தருணம் இனசனர் – சிநேகிதர் யாவரும் சமுகந்தந்து, புதுத்தம்பதிகளை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

P. J. சிறிலும், பாரியாரும்

"சோதி வாசம்"
உசன், மிருசுவில். 21-8-58

---

## சத்தியவேத பாதுகாவலன்

இலங்கையிலே வெளிவரும்
ஓரேயொரு கத்தோலிக்க தமிழ் வாரப்பத்திரிகை.
கத்தோலிக்கரை மாத்திரமல்ல, மறுசமயத்தினரையுமே
சந்தாதாரராகக் கொண்டது.
தனது நாமத்துக்கிணங்கக் கத்தோலிக்க சமயத்துக்கு
ஓர் பாதுகாவலனுக விளங்குவது.
சமய விஷயங்களை மட்டுமல்ல,
சமூக, அரசியல், பொருளாதார, உலகவிஷயங்களையும்
எடுத்துக் கூறுவது.
புனிதவீரர் பக்கத்தையும் சிறப்பாகக் கொண்டுள்ளது.

வருட சந்தா:

| இலங்கை, இந்தியா | வெளிநாடுகள் |
|---|---|
| ரூபா 5-50 | ரூபா 6-00 |

தனிப்பிரதி சதம் 10

மனேஜர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

## இல்லறமும் இறைவன் அருளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்பதை மனதில் பதித்துக்கொண்டு அதன் நல்நோக்கம் பூர்த்தியாகப் பெற்ருேரும், விவாகப்பொறுப்பில் உட்படவிருக்கும் வாலிபர், பெண்மணிகளும் தவம்செய்து நலம்பெறவேண்டும்.

தங்கள்மக்கள் பெருவாழ்வு வாழவேண்டுமென ஆசிக்கும் பெற்ருேர் தங்கள் இளைஞர்களைக் கண்காணித்துக் கண்ணை இமை காப்பதுபோன்று அவர்களது கற்பென்னும் ஆத்மீகசெல்வத்திற்கு எத்தகையகெடுதியும் ஏற்படாவண்ணம் அவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள். "பருவத்தே பயிர்செய்" என்பதற்கொப்பப் பெற்ருேர் தம்மக்களைத் தக்ககாலத்திலே குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்தி வைக்க வேண்டும். நாளாவட்டத்திலே பிதாமாதாக்கள் தங்கள்மக்களின் நோக்கங்களையும், போக்கையும் அவதானித்து, அவர்களை வழிநடத்துவது அத்தியாவசியகம். இக்கால இளைஞர்கள் பண்டைக்காலவாலிபர், கன்னியர் போன்று 30 அல்லது 35 வயது வரையும் குடும்பப்பொறுப்பை ஏற்கக் காத்திருப்பார்கள், தவம் செய்வார்களெனப் பெற்ருேர் பகற்கனுகாண்பது தவருகும். ஆகவே, பெற்ருேர் "பருவத்தே பயிர்செய்," "தனக்கெளியது சம்பந்தம்"எனும் சுலோகங்களை மறவாது, கலியாணஞ்செய்து வைக்கப் பிரயாசைப்படவேண்டும். பிள்ளைகளும் தங்கள் பெற்ருேர்செய்யவேண்டிய கடமையைமறவாது, தகுந்த வாழ்க்கைத்துணைவர், துணைவிகளைப் பெறத் தவஞ்செய்யவேண்டும். கடவுளை இரந்து கையெடுத்துவரவேண்டும். ஏனெனில், விவாகக் கட்டுகள் கடவுளாலேயே கட்டி வைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூர்து நகரின் சவால்

— ஜோ. சந்தியாகு சுவாமிகள், S. J. —

"நான்செய்துவருகிற இந்தக்கிரிகைகளே பிதாவானவர் என்னை அனுப்பினாரென்று என்னைப்பற்றிச் சாட்சியம் சொல்லுகின்றன"—அரு. 15/36.

இவ்வார்த்தைகளுக்கேற்க, யேசுக்கிறீஸ்துநாதர் வெளிப்படையான அடையாளங்களைக்கொண்டு தமது தெய்வீகத்தை ருசுப்படுத்தினார். இவ்வெளியடையாளங்கள் உண்மையானவை; உயிருள்ளவை. இவைகள் கிறீஸ்துநாதர் கடவுளென்று எண்பிக்க இன்னும் அசைக்கக்கூடாத சான்றுகளாக இருந்துவருகின்றன. யேசுக்கிறீஸ்துவின் தெய்வீகத்தை ருசுப்படுத்தப் புதுமைகள் சரியான சான்றுகள்என்றால் தெய்வீகத்துக்கடுத்தவைகளை, சுபாவத்துக்கு மேலானவைகளை ருசுப்படுத்தவும் புதுமைகள் தகுந்த சாதனங்களே. இத்தகைய சாதனங்கள் நிறைந்திருக்கும் இடம் லூர்து நகர்.

லூர்துநகரிலே நடந்த, நடக்கின்ற புதுமைகளை ஒவ்வொன்றாய் எடுத்து விளக்கம்கூறத் தேவையில்லை. அங்கே நடக்கும் புதுமைகள் சுபாவத்துக்கு மேலானவை, தெய்வீக முத்திரையிடப்பட்டவை என்று கத்தோலிக்காகிய நாம் ஏற்றுக்கொள்கிறோம். கணக்கற்ற ஏனைய மதத்தினரும் சந்தேகமறச் சொல்லிவருகிறார்கள். ஆனால், ஒரு சிலர் அங்கேநடக்கும் அற்புதசம்பவங்கள் புதுமைகள்அல்ல, இயற்கைக்குட்பட்டவை எனக்கூறி, தங்கள்இஷ்டம்போல் வியாக்கியானம் கொடுக்கிறார்கள். அவர்கள் லோகாயதவாதிகள். அவர்களுடைய வேதாந்தம் சுபாவத்துக்கு மேலானவைகள் ஒன்றுமில்லையென்பதே. அதனால், அவர்கள் அங்கே புதுமைகள் நடக்கிறதில்லை என்று சாதிப்பதில் ஆச்சரியமில்லை.

இதனால் சிலகத்தோலிக்கர் மனந்தளர்கிறார்கள். ஆனால், அவர்கள் புதுமையைக் காணும்போது தங்கள் விசுவாசத்தை வெளியரங்கமாகக் காட்டுகிறார்கள். எத்தகைய குறுகிய மனப்பான்மை இது! "பார்த்து விசுவசிக்கிறவர்களைவிடப் பார்க்காமல் விசுவசிக்கிறவர்களே பாக்கியவான்கள்." விரோதிகள் அதிகரிக்கக்கூடும். தங்களுடைய மிரட்டுதல், சூழ்ச்சி முதலியவற்றால் கிறீஸ்துவமக்களின் விசுவாசத்தைக் கொஞ்சம் அசைக்கக்கூடும். ஆனால், லூர்துநகர் இந்த லோகாயத சூழ்நிலையிலும் அசைக்கமுடியாத ஒரு மேலானசக்தியை எடுத்துக்காண்பிக்கிறது. அந்தச்சக்தியை உலகம் மேற்கொள்ள முடியாது. விசுவாசம், விசுவாசப்போக்கு—இதுதான் லூர்துநகரின் விசேஷ அம்சம்.

லூர்துநகர் புதுமைகளுக்குப் பேர்போன இடம்என்பது உண்மையே. அங்கு புதுமைகள் நடந்தன, நடக்கின்றன, என்றும் நடக்கும். ஆனால், அந்தப் புனித ஸ்தலத்தின் நோக்கம் புதுமைகள் மட்டுமல்ல. பல்லாயிரம் திருயாத்திரிகர்கள் அங்குசெல்லுகிறார்கள். எல்லாரும் வியாதிக்காரர்களல்ல. வியாதிஸ்தர்களிலும் சிலருக்குத்தான் அற்புதமான குணம் கிடைக்கிறது. ஆனால். இத்தனை ஆயிரம் மக்களையும் லூர்துநகருக்கு இழுப்பது விநோதமுமல்ல, விந்தையுமல்ல. ஒரு ஒரு புனிதசக்தியே அவர்களைக் கவர்ந்திழுக்கிறது.

இதன் உண்மைக்குக் கத்தோலிக்கரும், கத்தோலிக்கர் அல்லாதவர்களும் சாட்சியம் சொல்லுவார்கள். அர்ச். 10-ம் பத்திநாத பாப்பானவர் லூர்துஸ்தலம்சென்றுவந்த யாத்திரிகர்களிடமிருந்து கேட்டவைகளிலிருந்து கூறியதென்ன? உலகில் சுபாவத்துக்கு மேலானவைகள் மறைந்துபோகுமேயாகில், அவைகளை மறுபடியும் லூர்துஸ்தலத்தில் காணலாம் என்பதே. அர்ச். ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த ஓர்சாஸ்திரியான தோமஸ் யாதுகூறுகின்றார். சுபாவத்துக்கும், சுபாவத்துக்கு மேலானதுக்கும் ஒரு பெரியபிளவு உண்டு. இவ்விரண்டையும்சேர்ப்பது லூர்துபாலம்என்று கூறுகிறார்.

திருயாத்திரிகர்கள் விசுவாசத்தோடு லூர்துஸ்தலத்துக்குச் செல்லுகிறார்கள். எங்கும் செபமும், ஆராதனையும்தான். எங்கும் விசுவாசத்தைத்தூண்டும் சூழ்நிலை. அவர்கள் விசுவாசத்தோடு செபித்து, தங்கள் நேர்த்தியைச் செலுத்துகிறார்கள். அதே விசுவாசத்தோடு தங்கள் வீடு திரும்புகிறார்கள். தங்கள் அலுவல்களை அக்கறையோடு செய்கிறார்கள். இதைத்தான் லூர்துஸ்தல விரோதிகள் அறிய இயலாதவர்களாயிருக்கிறார்கள். இதைத்தான் அவர்கள் பரிகசிக்கிறார்கள். இந்தஆன்மீகத்தத்துவத்தை அவர்கள் இன்னதென அறியக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். கனவா, சாலவித்தையா, மருத்துவத்துக்கும்மேற்பட்ட ஒருவியாதியா இது என்று தங்களைத்தானே வியப்புடன் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஜோலா என்னும் நாஸ்திகன் லூர்துபுதுமைகள் பொய், அபத்தம்என்று ருசுப்படுத்த எண்ணி, மக்களுக்குலஞ்சம்கொடுத்து, அவர்களைப் பொய்சொல்ல வற்புறுத்தினான். அந்தஜோலா எங்கே? மக்கள் உண்மையை உணர்ந்தார்கள். அவன் இருக்கும்இடம்தெரியாமல் மறைந்தான்.

லூர்துநகர் விசுவாசத்தின் ஓர்வெளி அடையாளம். நாஸ்திகஉலகிற்கு லூர்துஸ்தலம் விடும்சவால் இதுதான். சென்றஆண்டுகளில் நாஸ்திகக்கொள்கைகள், பிரிவினைகள் லூர்தை அழிக்கப் பிரயாசைப்பட்டன. படுதோல்விகண்டன. லூர்துஸ்தலமோ வெற்றியடைந்தது தீயசக்திகள் அப்புனித ஸ்தலத்தை அழிக்க இன்னும் பிரயாசைப்பட்டு வருகின்றன. ஆனால், வீண்என்பதை அவைகள் அறியட்டும்.

லூர்துநகர் நமதுவிசுவாசத்தின் சுருக்கம். சர்வசக்தியுள்ள தேவபராமரிப்பு, மக்கள்மேலுள்ள கடவுளின் சிநேகம், மனிதஅவதாரம், தேவகன்னிகை, அவளது பலனுள்ளமன்றாட்டு முதலியவைகளை நினைப்பூட்டுகிறது நன்மைக்கும், தீமைக்குமுள்ள நாஸ்திகஎதிர்ப்பை லூர்துஸ்தலம் நினைவுபடுத்துகிறது. மக்களின்மேல் மாதாவின் அன்பை உணரச்செய்கிறது.

ஆகையால், கிறீஸ்துவமக்களாகிய நமக்கு லூர்துநகரின் அர்த்தமென்ன? கன்னித்தாயாம் மாமரியின்மேல் நாம் கொண்டுள்ள அடையாளமே லூர்துஸ்தலம் மரியன்னை லூர்துநகரைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சர்வேசுரனே சித்தமானார் ஆனதால் லூர்துஸ்தலம் கடவுள் மக்கள் மேல் வைத்திருக்கும் அன்பைக் குறிப்பாகக் காண்பிக்கிற கவர்ச்சியுள்ள ஓர்அடையாளம்; வரப்பிரசாதத்தின்ஒளி; சுபாவத்துக்கு மேலானவைகளைப் பிரகாசிக்கும்சுடர். அதனால்தான் நாஸ்திகன் லூர்துஸ்தலத்தில் மறைந்திருக்கிற இரகசியங்களை அறியக்கூடவில்லை. அவன் உலகத்தூசிபடிந்த கண்களோடு லூர்துஸ்தலத்தை உற்றுநோக்குகிறான். உலகப்போக்குநிறைந்த மனப்பான்மையைநீக்கி, சுபாவத்துக்கு மேலான வெளிச்சத்தின்உதவியோடு லூர்துநகரையும், அங்குநடக்கும் சம்பவங்களையும் அவன்பார்த்தால், லூர்துநகரின் உண்மையை அவனும் அறிவான்.

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானு?

(சென்றவாரத் தொடர்ச்சி)

"பிரபுவே, தமது இளையமகனை அழைத்துவரும்படியாக அரசகட்டளை பிறந்திருக்கிறது; அவன்கிறீஸ்துவேதத்தை மறுதலியாதேபோனால் சிறிதுவேளையிலே அரண்மனைவாயிலுக்கு முன்பாகவுள்ள அகன்றமைதானத்தில் வைத்துச் சுட்டெரித்துச் சாம்பராக்கப்படுவான்" என்று பயங்கரதொனியிலே படைத்தலைவன் திடீரெனக்கூறியதைக்கேட்ட தீயஸ்பிரபு சிம்மசொர்ப்பனம் கண்டவர்போல் திடுக்காட்டமுற்று ஓர்கால்தியங்கினார். சிந்தை கலங்கினார். அவர்பாரியாரோதிகைத்து மலைத்தாள். உளம் பதைபதைத்தாள். ஆயினும், இளையபுதல்வன் என்றமட்டிலே தாங்கள்மிகவும் அன்புபாராட்டி அதிகம்செல்வமாய்வளர்த்த பாலியன் அக்கினிச்சுவாலையில் எறியப்படப் போகிறானே; ஐயோ! எரிந்துசாம்பராகப் போகிறானே என்பதையிட்டுத்தான் அவர்கள் தியங்கினார்களா? அன்றேல் திகைத்தார்களா? இல்லையில்லை. இளவயதுடைய தங்கள் பாலியபுதல்வன் கொடிதாய் முளாசியெரியப்போகும் அக்கினிச் சுவாலையைக் கண்டஞ்சிப் பயப்பிராந்திகொண்டு வேதத்தை மறுதலித்துவிடுகிறானோவென்ற அச்சத்தினால்தான் அவ்விதம் தியங்கினார்கள். திகைத்தார்கள்.

சிறிதுவேளை மவுனத்தின்பின் தீயஸ்பிரபு தமதுபாலியகுமாரனை அன்புடன் விழித்து, "என்செல்வமகனே! நான் பலநாள் உனக்குச்சொன்ன அந்த விருத்தாப்பியரான பொலிக்கார்ப்என்பவரை மறந்துவிடாதே; ஒன்றில் நீ கிறீஸ்துவேதத்தை மறுதலிக்கவேண்டும், அன்றேல் தீச்சுவாலையில் எறியப்பட்டு எரிந்து சாகவேண்டுமென்று சொல்லப்பட்டபோது, அவர்சொன்ன பதில் என்னவென்று நீ நன்கு அறிவாய்தானே; அவர் தீச்சுவாலையைக்கண்டு பயப்படவில்லை; எனது அருமை மகனே! அக்கினிச்சுவாலையில் அவர்கள் உன்னைஎறிந்தாலென்ன அகோரவாதை புரிந்தாலென்ன, பால யேசுக்கிறீஸ்து உன்பக்கத்தில் இருக்கிறார் என்பதை நினைந்து, எதற்குமே அஞ்சாது, அந்தச் சின்னயேசுவுக்காக—அவருடைய திருமறைக்காக உன்பிராணனைத் தியாகஞ்செய்யப் பின்வாங்காதே" என்று கூறிக் கண்ணீர்ஆறாய்ப்பெருகத் தமது பாலியபுதல்வனைக்கட்டிமுத்தமிட்டார்.

அப்போதுதாய் இருவிழிகளிலிருந்தும் கண்ணீர் தாரைதாரையாகப்பெருகத் தனது அருந்தவப்புதல்வனை முகத்தோடுமுகம்வைத்து முத்தமிட்டு, "என் கண்மணியே! பத்துமாதம்சுமந்து நான்பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டிவளர்த்த என்பாக்கியமே! அவர்கள் தீச்சுவாலையில் உன்னை எறிந்தாலென்ன, கொடியசிங்கத்துக்கு உன்னை இரையாக எறிந்தாலென்ன எதற்கும்அஞ்சாதே; வேதத்தைமறுதலியாது ஓர்வேதசாட்சியாக நீ உயிர்விடுவாயானால், உன்னைஈன்ற பொழுதிலும் பார்க்க உன் தாய் பெருமகிழ்ச்சி அடைவாள் என்பதைமறவாதே; என்பாலிய மகனே! என்கண்ணே! உனது அன்னையை ஓர்தரம் அன்பாகக்கட்டி முத்தமிட்டுவிட்டு உறுதியானமனத்துடன் செல்வாயாக" என்று அவன்வதனத்தைத் தன்கண்ணீரால்நனைத்து முத்தமிட்டாள்.

இம்மொழிகளைக்கேட்ட அப்பாலிய மைந்தன் தனது அன்னையின்கழுத்தை இறுகத்தழுவிக்கொண்டு, "அம்மா! நீங்கள் அழவேண்டாம்; ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்; தீச்சுவாலைக்கோ, அல்லது சாவுக்கோ நான்பயப்படமாட்டேன்; வேதத்துக்காகச் சந்தோஷமாக என்பிராணனைப் பலியாகக்கொடுப்பேன்" என்று திடமனத்தோடுகூறித் தாயைமுத்தமிட்டான்.

அதன்மேல் அவனுடைய தமையனும், தமக்கையும் கவலைதோய்ந்தமுகத்தோடு அவனைமுத்தமிட்டு, "தம்பி, ஒன்றுக்கும்அஞ்சாதே; சின்னயேசு உன்னோடு இருப்பாராக" என்று தங்கள் அன்புத்தம்பியைக் கண்ணீர்பெருக வழியனுப்பிவைத்தார்கள்.

தாயும், தந்தையும், சகோதரங்களும் பாலியனைப் பின்தொடர்ந்துசெல்லப் பிரயத்தனப்பட்டார்கள். அப்போது படைத்தலைவன் அவர்களைமறித்துப் "பின்னால்நில்லுங்கள்; இந்தமனையை விட்டு நீங்கள் வெளிகொண்டால் கொடியதண்டனைக் குள்ளாவீர்கள்" என்று அவர்களைக் கண்டிப்பாக எச்சரித்தான். அதன்மேல்மத்தியாஸை எல்லோரும் கட்டியணைத்துக் கொண்டார்கள். தாங்கொணு மனோவேதனையுடன் தங்கள்கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டினார்கள். அப்போதுபாலியன் "என்னைச்சந்தோஷமாக வழியனுப்புங்கள்; நான் வேதத்துக்காகச் சாகப் போகிறேன்; இல்லை, நான் மோட்சத்துக்குப் போகப்போகிறேன்; அங்கே நாம்அனைவரும் ஓர்நாள் கட்டாயம் ஒன்றாகக் கூடியிருப்போம்" என்று ஆறுதலுரைகாரியஞ்சொல்லித் தனதுஇரு கரங்குவித்து, எல்லோருக்கும் ஆசாரஞ்செய்தான்.

அப்போது படைத்தலைவன் அவனுடையபெற்றோரைவிழித்து, "ஈனவிரக்கமற்றபாதகரே! கன்னெஞ்சம்படைத்த சண்டாளப்பாவிகளே! அரசனின்கட்டளைக்கமைந்து கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிடுங்கள்; அப்போது உங்கள்புதல்வனுக்கு ஒரு பொல்லாப்பும் வராது; ஐயோ! பால்மணம்மாறு இந்தப்பாலகனின்வாழ்வை இப்படியெல்லாம் பாழாக்குகிறீர்களே; கொடிய தீச்சூளையில் கொண்டுபோய்த் தள்ள வழிபண்ணுகிறீர்களே" என்று மனம் இரங்குவான்போல் கூறினான்.

அப்போதுபிரபு அவனை நோக்கி, "எமது செல்வமைந்தனை இறக்கக் கொடுப்பதும், இழந்துபோவதும் எமக்கும் பெருங்கவலைதான்; ஆனால், எம் திருமறைக்காக அவனை ஓர்வேதசாட்சியாக இறக்கக்கொடுப்பதும், இழந்துபோவதும் எமக்குப் பெரும்பாக்கியமும், மகிமையுமாகும்" எனப்பகர்ந்து, மறுபடியும் தமதுபுதல்வனைநோக்கி, "எம்செல்வமே, திரும்பவும் சொல்லுகிறேன்; போ, அஞ்சாமற்போ; ஆண்டவர் உன்னோடிருப்பாராக; நீ அனுபவிக்கப்போகும் வாதைவேதனையெல்லாம் சொற்பவேளைதான்; அதன்மேல் நித்தியபேரின்ப பாக்கியத்தைஅனுபவிப்பாய்" என்று வீரத்துவமாகமொழிந்தார்.

பின்னர்எல்லோரும் வழியனுப்பிவைக்கப் பாலியமத்தியாஸ் வீதியை அடைந்தான். படைத்தலைவனும், படைவீரரும் உருவியவாளுடன் புடைசூழ்ந்துசெல்ல, ஓர்கொலைபாதகனைப்போன்று வழிநடந்துபோனான். போகும்போது, இடையிடையே பின்னால் திரும்பிப் பார்த்துக் கண்கலங்குவான். கணணீர் சிந்துவான். பிறகு எதனையோ சிந்தித்தவனைப்போல் புன்னகை கொள்வான். பெற்றோரும், சகோதரங்களும் கண்ணுக்கெட்டிய தூரம்வரையிலே அவனைக் கண்கள் கலங்கக் கண்ணோக்கியபடியே நின்றுவிட்டு உள்ளேசென்றார்கள்.

போர்வீரராலும், அவர்கள்தலைவனாலும் சூழப்பெற்றுத் தீயஸ்பிரபுவின் பாலியகுமாரன் வழிநடந்துசெல்லுகையில் பாதசாரிகளும், வாகனரூடராய் வழிசென்றவர்களும்; பாதையின் இருமருங்கிலுமுள்ள மனைகளில்வசித்திருந்த மக்களும் அவனை ஏறிட்டுப்பார்த்து, "என்ன அநியாயம், இந்தச்சின்னஞ்சிறுபாலியனைப் பென்னம்பெரிய ஓர் பாதகனைப்போலப் பெருங்கட்டுக்காவ

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

உலகத்தில் நல்லமனிதர் பலர்உண்டு; முத்தம்மாவை அல்லது சவிரிமுத்துவைப்போல. முத்தம்மா இளமையும், அழகும் பொருந்தியவள்; பாயும் படுக்கையுமாய்க்கிடந்த தன்தாயை அவள் பலநாட்களாகப் பராமரித்தாள். கோடையும், மாரியும் பல வந்துபோயின. தாய்வருந்திஞள்; மகளுடைய குறைவில்லா அன்பும், கவனமும் அவளை ஆறுதற்படுத்தின.

சவிரிமுத்து நல்லதேகக்கட்டுள்ள வாலிபன்; படித்தவன்; பல திறமைகளுள்ளவன். நோயாளியான தகப்பனை அவனே பராமரிக்க வேண்டியிருந்தது. பகலில்வேலை; மாலையிலும், அதிகாலையிலும் அவனுக்கு ஒரே எண்ணம் — தகப்பனுடைய வருத்தத்தைத் தணிப்பது

இருவருடைய வாழ்க்கையிலும் ஆண்டுகள்பல பறந்தன; இளமையும் மறைந்தது. வாழ்க்கையில் அன்பு, ஆனந்தம், குடும்பம் எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி. ஆயினும் பெற்ருேர் பாசம் பெருகியது. உலகம் அளவிடும்விதத்தில் இருவருடைய வாழ்வும் அழிந்தது; விடுதலை கிடைத்தபோது காலம்கடந்துவிட்டது.

அவர்களுடைய வாழ்வு எதில் அழிந்தது? குடும்பம், குதூகலம் தேடும் சந்தர்ப்பத்தில் அழிந்தது. கிறீஸ்துவ அன்பின் உச்சநிலை அடைவதில் சந்தர்ப்பம் அழிந்ததா? பெற்ருேரைப் பேணுவதில் இளைஞருக்குக்காட்டும் உத்தம மாதிரியில் அழிந்ததா? பிள்ளைஅன்பும், பரித்தியாகமுங் கொண்ட சிலுவையைக் கல்வாரிமேட்டுக்குச் சுமந்துசெல்வது அழிந்ததா? நித்தியவங்கியில் மதிக்கரிய மாணிக்கங்களைச் சேர்க்கும் சந்தர்ப்பம் அழிந்ததா? இல்லவே இல்லை. ஆகவே, அவர்கள் நல்ல மனிதர். தேடற்கரிய திரவியங்கள் என்று கூறுவது சரிதானே?

அப்படி நீங்களும் ஆகலாமல்லவா?

அண்ணு

—*—

## பந்தையம் வென்றேன்

பிரான்ஸ்தேசத்திலே ஓர் ஊரில் தெய்வ பயமற்ற அநேக வாலிபர் கூட்டமாய்க்கூடிக்கொண்டு, ஒரு நாள் வேதத்தைப்பழித்துப் பரிகாசமாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, அவர்களில் ஒருவன் எழுந்துநின்று "நண்பர்களே! நான் கோவிலுக்குச்சென்று பாவசங்கீர்த்தனம் செய்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள்?" என்றுகேட்க, இதைக் கேட்டவர்கள் சிரித்துக்கொண்டு, "இங்கே எத்தனைபேர் இருக்கிருேமோ அத்தனைபுட்டி மதுபானம் கொடுப்போம்" என்ருர்கள். இதற்கு அத்துஷ்டன் சம்மதித்து, மறுநாள் சாயந்தரம் கோவிலுக்குப் புறப்பட்டுப்போய், அங்கு பாவசங்கீர்த்தனம் கொடுத்துக்கொண்டிருந்த குருவானவர் ஒருவரை அணுகி, "சுவாமி, நான் உண்மையான கருத்துடன் பாவசங்கீர்த்தனஞ் செய்ய இங்கு வரவில்லை. ஆனல், நான்போட்ட பந்தையத்தை வெல்லும்படியாகவே இங்குவந்தேன். நான் இன்னின்ன பாவங்களைச் செய்தேன். ஆனல், அவைகளைப்பற்றி எனக்கு அற்பசிந்தனையுமில்லை. இந்தப் பாவத்தைச் செய்தேன். அதற்கும் நான் விசனப்படவில்லை. இந்தப் பாவத்தையும் கட்டிக்கொண்டேன். அதற்காகவும் எனக்குயாதாமோர் விசனமுமில்லை" என்று சொல்லிப் பாவசங்கீர்த்தனத்தை முடித்தான். குருவானவர் அவனைப்பார்த்து, "நல்லது, உன் பந்தையத்தை வென்ருய், நீ இப்போது பாவசங்கீர்த்தனம் செய்தபடியால், அதற்கான அபராதம் கொடுக்கிருேம். கவனமாய்க்கேள்: "நான் ஒருநாள் சாவேன். அதற்காக விசனப்படமாட்டேன். செத்தவுடன் தீர்வைநடக்கும். அதைப்பற்றி எனக்கு அற்ப சிந்தனையுமில்லை. பாவிகள் நரகத்திற்குப் போவார்கள். அதனல் எனக்குக் கவலையில்லை" என்னும் வார்த்தைகளை மூன்றுநாளைக்கு ஒவ்வொரு நாளும் மூன்றுதடவை காலை, மத்தியானம், மாலை வேளைகளில் சொல்லிவா என்று கற்பித்தார்.

பிறகு இந்த வாலிபன் நேரே தன் தோழரிடம்சென்று, "பந்தையம் வென்றுவிட்டேன். மதுபானப்புட்டிகள் எங்கே?" என்றுகேட்டுப் பாவசங்கீர்த்தன சமயத்தில் தனக்கும், குருவானவருக்கும் நடந்த சம்சம்பாஷணையைப்பற்றிச் சொன்னபோது, எல்லோரும் தமாஷாகச் சிரித்துக்கொண்டு, "நீ பாவசங்கீர்த்தன அபராதத்தைத் தீர்த்தபின்னரே புட்டிகளைப் பெற்றுக்கொள்வாய்" என்ருர்கள். அப்படியே அவன் முதல்நாள் தன் அபராதத்தைத் தீர்த்தபோது யாதொரு கவனமுமின்றிக் குருவானவர்சொன்ன வார்த்தைகளை உச்சரித்தான். மறுநாளோ அவ்வார்த்தைகளைக் கவனமாய் உச்சரித்தபோது, மரணத்தையும், தீர்வையையும், நரகத்தையும்பற்றி யோசனைசெய்து பயப்படலாஞன். ஆகையால், முன்னர் பாவசங்கீர்த்தனங் கொடுத்த குருவானவரை அண்டிப்போய்த் தன் சரித்திரத்தை அவருக்கு வெளியிட்டு, பிறகு நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து துஷ்டருடையசகவாசத்தை விட்டுவிட்டு முற்றிலும் நல்ல கிறீஸ்தவனுய் நடக்கத் தொடங்கினன். பிள்ளைகளே! எவனெருவன் தன் சீவியகாலத்தில் அடிக்கடி சாவு, தீர்வை, நரகம் இவற்றைப்பற்றித் தியானிப்பானே அவன் கடைசியில் இரட்சணியம் அடைவான் என்பது நிச்சயம்.

— எஸ். பீ.

* * *

"செபத்தில் கேட்கிறதை நாம் அடையவேண்டுமானல், நமது செய்கை நமது செபத்துக்கு ஒத்ததாய் இருக்கவேண்டும்."

## றெஜினு மேரி

றெஜினுமேரி என்னும் எட்டுவயதுச் சிறுமி வீட்டில் யாவருக்கும் செல்லப்பிள்ளை. அவள் தகப்பன் அவளை அதிகமாய் நேசித்தான். கடைக்குப் போய் வரும்பொழுதெல்லாம் தன் செல்வப்புதல்விக்குத் தீன்பண்டம் வாங்கிவர மறவான். ஆனல், தன்பிள்ளைமட்டில் அன்பாய் இருந்ததற்குப் பதில் தன் மனைவியோடு எந்நேரமும் கோபமாயிருப்பான். அவன் குடியாத நாளும் இல்லை, தன் மனைவியுடன் சண்டைபிடியாத நாளும் இல்லை. மேலும் இவனுக்கு வேறுசில துர்க்குணங்களும் இருந்தபடியால் இருபது வருஷமாகப் பாவசங்கீர்த்தனஞ் செய்யாமலும், திவ்வியநன்மை பெருமலும், கோவிலை அதிகந் தேடாமலும் வேதகாரியங்களை வெகுவாக அலட்சியம் செய்துவந்தான்.

இப்பேர்ப்பட்டவனின் செல்வமகள் புதுநன்மை வாங்கக் காலம் வந்துவிட்டபடியால் மற்றப் பிள்ளைகளுடன் மடத்திற்குப்போய் அதற்கு ஆயத்தப்படுத்திவந்தாள். அவள் மடத்திலிருந்த மூன்றுநாளும் தகப்பன் மகளைக் காணுதபடியால் சரியான தூக்கமில்லாமல் இருந்தான். அவளுக்கு வேண்டிய ஆடையும், ஆபரணங்களும், மிட்டாய் வகையும் சேகரித்து வைத்திருந்தான். மகள் புதுநன்மை வாங்குவதற்கு முதல்நாள் பாவசங்கீர்த்தனம் செய்துவிட்டுக் குளித்து உடுத்திக்கொள்ள வீட்டிற்குவந்தாள். தகப்பன் அவளைக் கண்டதும் தூக்கிவாரி முத்தமிட்டு, அவளுக்கு ஆடை ஆபரணமெல்லாம் அணிந்து, மிட்டாய் வகைகளையும் கொடுத்தான். ஆனல், றெஜினு அவைகளை விரும்பாது முகவாட்டமுற்றவளாய் இருந்தாள். அப்போது அவன் அவளை நோக்கி: "கண்ணே, றெஜினு! உன் முகவாட்டத்துக்குக் காரணம் என்ன?" என்ருன். றெஜினு பெருமூச்சு விட்டுத் தேம்பி அழுதாள்.

"என் செல்வமே! நீ வாட்டமுறுவதை என்னுல் தாங்க முடியவில்லையே; கள்ளப் பாவசங்கீர்த்தனம் செய்தாயா? சொல்லம்மா!" என்ருன். அவள் தேம்பித்தேம்பி அழுதுகொண்டு "இல்லையப்பா" என்று சொல்லி மறுபடியும் அழத் தொடங்கினுள்.

"சொல்லு கண்ணே! உன் மனதில் உள்ளதை ஒளியாமற் சொல்; எதுவேண்டுமென்ருலும் தருவேன்" என்று தகப்பன் சொல்ல, "அப்பா! நான் கேட்பதைக் கொடுக்க வாக்களிப்பீர்களா?" என்று கேட்டாள் சிறுமி. "அதற்குத் தடையில்லை" என்ருன் அவன்.

"நாளை நீங்களும் என்னேடு சேர்ந்து திவ்விய சற்பிரசாத விருந்து அருந்தவேண்டும்" என்ருள் றெஜினு. தகப்பன் யோசித்தான். கண்களில் நீர் ததும்பியது. "ஆகட்டும் என் ஆசை மகளே!" என்று அவளைக் கட்டி ஓர்முத்தம் கொடுத்தான்.

றெஜினு கொஞ்சம் புன்சிரிப்புடன்: "அப்பா! உடனே வாருங்கள்; கோவிலுக்குப் போய்ப் பாவசங்கீர்த்தனம் செய்யலாம்" என்ருள். "இல்லை மகளே, நாளைக் காலையில் வருவேன்" என்ருன் தந்தை. மகள் மறுபடியும் அழ ஆரம்பித்தாள். உடனே வாங்க ... ஊம் ... ஊம் ... என்று அழுதாள்.

பிடிவாதச் சிறுமியின் சொல்லைத் தட்டமுடியாமல் அன்றேஅவளுடன் கோவிலுக்குச்சென்று, பாவசங்கீர்த்தனஞ்செய்து, இருபது வருடத்திற்குப்பிறகு மறுநாள் திவ்விய சற்பிரசாதம் உட்கொண்டான்.

பாலர்களே! நீங்கள் திவ்வியயேசுவை உட்கொள்ளும்பொழுது, உங்களுடன் உங்கள் அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, பாட்டன், பாட்டி, தாத்தா முதலியவர்களும் வருகிருர்களா? வீட்டில் யாவரும் பாஸ்குக் கடனைத் தீர்க்கும்படியாய் றெஜினு என்ற சிறுமியைப்போல் நீங்களும் செய்வது கஷ்டமா? இல்லையே! அப்படியானுல் நீங்களும் உங்கள் குடும்பத்தாருக்காகவும், உங்கள் ஊரிலுள்ள பாவிகளுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். அவர்கள் நல்வழியில் நடக்க உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.

— 'ஸாக்ஷி'

—*—

## அவராலே

— சாந்தினி —

சூரியன் வருவது அவராலே
சுடரொளி தருவது அவராலே
கார்மழை பொழிவது அவராலே
கடவுளை வணங்கிட மறவோமே.

●

சந்திரன் சுழல்வது அவராலே
சமுத்திரம் இயங்குதல்
அவராலே
அந்தர விண்மீன் அவராலே
அமலனைவணங்கிட மறவோமே.

●

ஊர்வன பறப்பன அவராலே
உலவிடும்விலங்கினம் அவராலே
நீர்வளர் மீன்வகை அவராலே
நிமலனை வணங்கிட மறவோமே.

●

பவனமும் அசைவது அவராலே
பலகலை ஞானமும் அவராலே
புவனமும் பொருள்களும் அவராலே
பூரணன் பூம்பதம் பணிவோமே.

## ஜெனறலின் பக்தி விசுவாசம்

ஜெனறல் தெ மிரிபேல்அவர்கள் லையோன்ஸ்மாகாண இராணுவப்பிரிவுக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டபோது சிலநாஸ்திகபத்திரிகைகள் அந்த நியமனத்தைப்பற்றிக் குறைகூறின. ஏனெனில், அவர் உறுதியான ஓர்கத்தோலிக்கர்என்பது யாவருக்கும்தெரிந்திருந்தது. அதைக்கேள்விப்பட்டு அந்தஜெனறல் "ஆம், நான் ஓர்கத்தோலிக்கன்தான்; நான்கத்தோலிக்கனுய் இருப்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன்; எப்போதும் பெருமைப்படுவேன்" என்றுசொன்னர். இராணுவத்தில் அவிசுவாசத்தை உண்டுபண்ணச்செய்யப்படும் முயற்சிகளெல்லாம் சென்மதேசத்திற்கு விரோதமான பெரும் பாதகமென்று அவர்நினைத்திருந்தார். "பிரான்ஸின்சீவியம், வல்லபம், பாதுகாப்புஆதியவற்றின் மிக உந்தமானபாகத்தை இழக்கச்செய்வதுதான் இராணுவத்தில் அவிசுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தை நுழையச்செய்வதின் பயன்" என்று அவர் பயமில்லாமல் சொல்லுவார். பாஸ்குகாலத்தில் ஜெனறல் தெமிரிபேல் எப்போதும் முழுஇராணுவ (யூனிபோம்)உடுப்புடன் திவ்வியசற்பிரசாதம் பெறுவார். அவர் அடிக்கடி சொல்லிவந்ததாவது: "நான் இரண்டு கடமைகளை நிறைவேற்றவேண்டியது. போர்வீரனின்கடமை ஒன்று; கிறீஸ்துவனின் கடமை மற்றொன்று. அவசியமாயிருக்கும்போது எனதுசென்ம தேசத்திற்காக என்இரத்தத்தைச்சிந்த நான்தயாராயிருக்கிறேன்; ஆனால், அதற்காக என்ஆத்துமத்தை இழக்க நான்கடமைப்பட்டில்லை; ஆகையால் அதைக் கடவுளிடம்மாத்திரம் நான் ஒப்பிப்பேனேயொழிய மற்றப்படியல்ல."

## தாம் ஓர் கிறீஸ்துவர்தானு?

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

னுடன் கொண்டுசெல்கின்றனரே; அப்படித்தான்என்னபழியை அவன்செய்திருப்பான்; வதனத்தைப்பார்த்தால் பொன்சொரிவதுபோல் புன்னகைதவழ்கின்றதே; அவனுடைய கம்பீரநடையைப் பாருங்கள்; அவன் அணிந்திருக்கும் அலங்கார உடையைப்பாருங்கள்; ஆரோ உள்ளஇடத்துப் பிள்ளையைப் போலக் காணப்படுகிறானே. பாவம், இந்தச்சிறுவனுமா பிழைசெய்திருப்பான்; என்ன ஆச்சரியம்!" என்று இரங்கிப்பரதவித்துக் கூறினார்கள்.

பாலியனும் மெல்லமெல்ல நடந்து கொண்டேபோனான். கடைசியர்களைத்தும், உளங்களையாதவனாய் அரசமாளிகை போய்ச்சேர்ந்தான்.

(தொடரும்)

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 20-ந்தேதி பி. ப. 4மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அச்சமயம் 5பேர்கள் தமதுநவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள். பகுதித்தலைவர்கள் சங்கம் பி. ப. 3-30மணிக்கு நடைபெறும். தயவுசெய்து பகுதித்தலைவர்களும், மற்றவர்களும் நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு வேண்டுகின்றேன்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

## அர்ச். வின்சென்ற் டீபோல் தருமசபை

அர்ச். வின்சென்ற் டீபோல் தருமசபைப் பந்திகளின் இரண்டாம் கால்வருடப் பொதுக்கூட்டம் இம்மாதம் 24-ந்தேதி ஞாயிறுவாரம் பி. ப. 5-30மணியளவில் நாவாந்துறை, பரலோகமாதா பங்கிச்சாலையில் நடைபெறும். சகலபந்திகளின் அங்கத்தவர் யாபேரும் நேரத்தோடு அதற்குச்சமுகங் கொடுக்குமாறு தயவாய் வேண்டுகின்றேன்.

A. S. FRANCIS OF MARY
தனிச்சங்க காரியதரிசி

## நேர்த்தியின் பூர்த்தி

எந்தமருந்துக்கும் மாறாதிருந்த, எனது காலில் உண்டாகியநோய், பரிசுத்தசதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினால் மாறியது. இரக்கத்தின் மாதாவே உமக்குத்தோத்திரம். சீவியகாலம்முழுவதும் நன்றியுள்ளவளாக இருப்பேன்தாயே. இவர்களின் நாமம் புகழப்படுவதாக. இன்னும்எனக்கு வேண்டிய உதவிசகாயங்களை அருளும்படி தாயேஉம்மைஇரந்து மன்றாடுகிறேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கப் பிந்தியதற்காக மன்னிப்புக் கோருகிறேன்.

மாமுலை R. A.

யாழ்ப்பாணம்

## அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

இத்திருநாட் கொண்டாட்டம்நிகமும் ஆவணிமாதம் 16-ந்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 27–ந்திகதி புதன்கிழமை முடிவாகும்

C. யோண்மேரி, O. M. I.,
கட்டளைக்குரவர்.

முகமாலை

## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

முகமாலைப்பதியில் அர்ச். பிலோமினம்மாள்திருநாள் வழமைபோல் இவ்வருடமும் ஆவணி 12-ம் திகதி ஆரம்பமாகி, 24-ம் திகதி முடிவடையும்.

கட்டளைக்குரவர்,
நல்லூர்மீசாம்.

## மரண ஞாபகம்



**அ. மரியஞானசௌந்தரி**

பிறப்பு: 14—5—1927 இறப்பு: 4—8—1958

எப்போதுமே மலர்ந்தமுகம். மாறாத குழந்தைஉள்ளம். மற்றவர்கள் மனதைத் தன்வசம் ஈர்க்கும்கவர்ச்சி. அழகிற்கும், தூய்மைக்கும் ஒப்ப, அமைந்தது அவளின்பெயர் — மரியஞானசௌந்தரி.

இவள் திரு. நீக்கிலாப்பிள்ளை தம்பதிகட்கு 1927-ம்ஆண்டு வைகாசி14-ந்திகதி மகளாகத் தோன்றினாள். சிறுவயதிலிருந்தே தெய்வபக்தி அவளிடம் சிறந்து விளங்கியது. தன்னுடையகோவிலுக்குத் திருந்தாதிமணி அடித்ததும் செபமாலை ஓதுவதற்காக, எதுவிதப்பட்டும் தம்பிமார்களையும்அழைத்துச் சென்றதே இதற்கு ஓர்சிறு அத்தாட்சி. அல்லாமலும் கோவிற்பாடலிலும் தேர்ச்சிபெற்றுச் சிறந்துவிளங்கினாள். ஓய்வுநேரங்களில் சகோதரருக்கும் பாட்டுக் கற்றுக்கொடுப்பது அவள் வழக்கமாகிவிட்டது. பருவம்வந்ததும் சில்லாலையைச்சேர்ந்த திரு. பே. அந்தோனிமுத்துவை மணமுடித்தாள். அவளுக்கு நாலு அருமைச்செல்வங்கள் உண்டு. எல்லோரும் ஒன்பது வயதிற்குஉட்பட்டவர்கள். இவளின் இளையசகோதரர் பெரியகுருமடத்தில் கல்விபயின்று வருகின்றார்.

இவளின் "பொறுமை" தான் ஊர்மக்களைபெரிதும்கவர்ந்தது. "பொறுமையின்சிகரம்" என்று அழைத்தனர். அப்பொறுமையிலும் உறுதியான புதுமைப் பக்தியைக் கண்டனர். இல்லறவாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளக்கினர்.

இவளைச் சிலதினங்களின்முன்பு இறைவன் தன்அன்புக் கரங்கொண்டு அழைத்தார். இளமையிலேயே அழைப்பிதழைக் கொடுத்துவிட்டார். இவளின் புனிதஆத்துமம் நித்தியத்திற்கும் இளைப்பாற்றி அடைவதாக. "கர்த்தர் தந்தார்; கர்த்தர் எடுத்துக்கொண்டார்; அவர் திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக." இவளை இழந்து பரதவிக்கும்

கணவர்: பே. அந்தோனிமுத்து
பிள்ளைகள்: அ. பிலோமினா
அ. மேரி மாகிறேற்
அ. பவுலீசம்மா
அ. மரிய ஞானமலர்.
தாய்: நீ. எமிலியாப்பிள்ளை
சகோதரர்: [illegible]
நீ. மரியசேவியர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1105

அச்சுவேலி
1. அல்பேட் லியொனெல் பெனடிக்றரும்,
2. பெண் மேரி பிலோமினாவும்
— வழக்காளிகள்.

எதிராக
புத்தூர்
1. அருணாசலம் கனகசபை முத்துக்குமாரும், உடுப்பிட்டி
2. செதுங்கமாப்பாணர் இராசா அல்லது தம்பு இராசா அல்லது சிவப்பிரகாசமும் — எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1105-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு புரட்டாதிமாதம் 23-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,643உம், இன்னும் ரூபா 1,000-த்திற்கு 11-7-56 தொடக்கம், 10-10-56 வரைக்கும் 8%வட்டியும். அதற்குப்பின்னால் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 185 ரூபா 49சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க் கோவிற்பற்று, புத்தூர்தெற்குஇறை கிட்டுவன்தனை. பர. நில. இலா. 10-உம், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — சந்திரசேகரம் தாமோதரம்பிள்ளையின் ஆதனம். வடக்கு — கனகசபை முத்துக்குமாரு பெண் அபிராமிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு—ஒழுங்கை. தெற்கு—முதலாம்எதிரி கனகசபை முத்துக்குமாருவின் ஆதனம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம் 18-8-58.

## அமரத்துவம்

பிறப்பு: 6—9—1900 இறப்பு: 10—8—1958

எனது நேசபத்தினியும், எங்கள் ஆருயிர் அன்னையுமான,

**ஆனசி நீக்கிலாப்பிள்ளை அவர்கள்**

அந்தியகாலவேளையில் கடைசித்தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுத் தேவனடியை அடைந்தார்.

இதனைக்கண்ணுறும் சகலரையும் இவருடையஆத்துமா சாந்திஅடைய இறைவனிடம் இரந்துமன்றாடும்படி வேண்டி நிற்கும்:

கணவன்: நீக்கிலாப்பிள்ளை
பிள்ளைகள்: அல்பேட், பிலோமினா, கிறிஸ்தோப்பர், பீற்றர், திரேசாபுஷ்பம்.

"இரக்கமுள்ள யேசுவே இந்தஆத்துமத்திற்கு நித்தியஇளைப்பாற்றியைக் கட்டளைபண்ணியருளும்."

## THANKS

My heartiest thanks to Our Lady who has cured my son of many chronic diseases and has steered him to a happy marriage. May her Name be praised forever.

Mrs. S. T. A.

Naranthanai.

## அர்ச். சூசையப்பருக்கு நன்றி

வெகுகாலம் சுகயீனமாகஇருந்தஎனது தகப்பனார் அர்ச். சூசையப்பரின் உதவியால் வெகுசீக்கிரம் குணமடைந்தார். அர்ச். சூசையப்பரை நம்பினோர் ஒருபொழுதும் கைவிடப்படமாட்டார்.

ஜே. சந்தியாகு பெர்னாந்து
கொழும்பு

## மட்டக்களப்பு

### புளியந்தீவு

மோட்ச இராக்கினிமாதா திருநாள்: ஆவணி 1-ந்திகதி பிற்பகல் 5 மணிக்கு மாதாவின்கொடியேற்றவைபவத்துடன் இத்திருநாளின் ஆரம்பஉற்சவங்கள் ஆரம்பமாயின. அன்றுமுதல் தினமும் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ் செய்துவைத்துச் செபமாலை, பிரார்த்தனைசொல்லி ஆசீர்வாதம் அருளப்பட்டுவந்தது.

11-8-58முதல் 15-8-58வரை காலை இருபூசைகளிலும் வண. ஜி. நியோப்பிளஸ்சுவாமியவர்கள் மாதாவின் வாழ்க்கைவரலாற்றில் மிளிர்ந்தபுண்ணியங்களை ஆதாரமாகக்கொண்டு அரிய பிரசங்கங்கள்செய்தார். அதிகஉருக்கமான அவருடையபிரசங்கங்கள், மாதாவின் புண்ணியபூங்காவிலிருந்து அநேக நறுமலர்களை எடுத்துதவக்கூடியதாக இருந்தன.

14-ந்திகதியன்று ஆலயமும், அதன் மைதானமும் அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருக்க அன்றுமாலை தேவதாயாரின் திருச்சுரூபம் அலங்காரமான சப்பரத்தில்வைத்து ஆலயத்தைச் சூழவாவுள்ள நான்குவீதிகளிலும், சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசெல்லப்பட்டது. அதில்கலந்து அணிவகுத்துச்சென்ற விசுவாசிகள் பாவாலும், நாவாலும் மாதாவைவாழ்த்திச்சென்ற காட்சி எவருக்கும் பக்திப்பரவசம் உண்டுபண்ணக்கூடியதாய் இருந்தது. பின்னர் வண. ரி. ஆறன்ஸ், சுவாமியவர்களால் வண. ஏ. டெல்மாமோல், வண. ஜி. ஈ. எல். வம்பேக் எனும் குரவர்களின்உதவியோடு மாலை ஆராதனை பாடித் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. 15-ந்திகதி காலை 5-30மணிக்கும், 7-30மணிக்கும் பூசைகள் நடைபெற்றன. 7-30மணிக்கு வண. ரி. ஆறன்ஸ்சுவாமியவர்கள் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். அன்று மதியத்தின்போதுஅன்னதானம் வழங்கப்பட்டுப் பிற்பகல் 5மணிக்குத் திவ்வியநற்கருணைஆசீர்வாதத்துடன் திருநாள் முடிவுற்றது.

திருநாட்காலங்களிலே மக்களின் மனதைத் தேவனின்பால்திருப்பக்கூடிய அரியபிரசங்கங்கள் செய்வித்தும், எவர்க்குமே அன்பாதரவுகாட்டி, உச்சாகமூட்டியும்வருகின்ற எமது பங்குக்குருவரின் ஆத்தும இரட்சணிய வாஞ்சை பாராட்டத்தக்கதாகும்.

—நிருபர்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எங்கள் அன்பிற்குரிய பரிசுத்ததேவதாயாரின் பேருதவியினால் என்கணவர் பலமாதங்களாகப் பீடிக்கப்பட்டுவருந்திய கொடியநோயிலிருந்து காப்பாற்றப்பட்டார். இப்பேருதவிக்காக அவவுக்கு நன்றிசெலுத்துவதுடன், எனது குடும்பத்தை என்றும் தமது அரவணைப்பில் வைத்திருந்து ஆசீர்வதிக்கும்படியும் வேண்டுகிறேன்.

சி. மே. பி.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள யூகோசிலேவியாவிலே சாகிறெப்மாகாணத்திலுள்ள யேசுசபைக்குருமாரின் சிரேஷ்டரான வண பிறான்ஜோ ஜம்பிறே கோவிக் சுவாமியார் 15 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறாரென றோமாபுரியிலே செய்தி கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்தஆட்சிக்குமாறான ஓர்இயக்கத்தையும், யூகோசிலேவியமக்களிடையே விரோதத்தையும் உண்டுபண்ணினாரென்ற கம்யூனிஸ்தர்களின் வழமையானகுற்றச்சாட்டுத்தான் இவர்மீதும் சுமத்தப்படலாயிற்று.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 21-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org